
# நினைவுமலர்



அமரர்

## திரு.மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி

அவர்கள்

31.03.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வடமராட்சி வடதுன்னை வாழ்

அமரர்

# திரு. மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 31.03.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மாசறு மாணிக்கமாய் இருள் அகல்
மணிவிளக்காய் மனவானில்
பூசித்தெழும் அன்புத் தெய்வமாய்
புன்னகை விரிந்திடும் இன்ப பொக்கிசமாய்
காசி தீர்த்தம்போல் ஊற்றெடுத்து
கனல்பொல் அமை வாழ்வினை களையவந்த
தீபச்சுடரே நீங்கறியா நெஞ்சே
திகைப்பூட்டும் நிலையாயல் வெந்தோமே - என்ன
பாவம் யாம் இழைத்தோமோ இறைவா
இனிய அருளை யாம் இழந்தனமே
ரூபம் இட்டே எமைக் காப்பீர்களென எண்ணியே - உம்
தொலைவு நொந்தே தங்கள் பாதங்காண இத்தொகுப்பினை
அர்ச்சிக்கின்றோம்
அன்னார் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

31-03-2003

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய் கிழக்கு இலகடியைப்
பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட



தோற்றம்
16 – 01 – 1962

மறைவு
01 – 03 – 2003

அமரர்

# திரு.மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி

அவர்கள்

## திதி வெண்பம்

தக்க சித்திர பானு சார் மாசித்திங்கள்
மிக்க வௌ்ளிர் மேவு அபர சதுர்த்தசி திதியே
கொற்கை நல் பஞ்சாட்சரமூர்த்தி - குவலயம்
விட்டே ஈசனடி சேர்ந்தா ரென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பொங்கி பொலிவுகாண் புகழ் உருவம் உனதையா
கங்குல் மறை செங்கதிரோன் ஒளிக்கீற்றினைப் பாச்சி
அங்குச வானரே அணைப்பாய் ஐயா வணங்குறோமே
மங்கலுறு வரமிறைப்பாய் மனமுறை செம்மல் நீயே.

## தேவாரம்

பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்
உண்ணின்ற தோர்சுவையு முறுதாளத் தொலிபலவும்
மண்ணும் புனலுயிரும் வருகாற்றுச்சுடர்மூன்றும்
விண்ணும் முழுதானானிடம் வீழிம் மிழலையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனே விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதனில்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம் பலமேயிடமாக
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறிடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூத பரம்பரை பொலியப்புனிதவாய் மலர்ந்தபூத
சீதவள வயற்புகலி திருஞான சம்பந்தன்
பாதமலர் தனைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**

**நெஞ்சு நெகிழ் நிலை கண்டு நொந்து நிற்கும்**
**குடும்பத்தினர் அமரர் பஞ்சாட்சரமூர்த்தியின்**
**ஆத்ம திருப்திக்காய் இறைவழி நாடியமை**

## மாலிசந்தி விநாயகர்

அறியாப் பருவம் ஐயா அன்னை தந்தை அழைப்பினில்
சிறியோன் இவர் சிரித்து விளையாடிய உன்தலமதில்
அறிவாய் ஐயா இந்த ஆண்மகன் தொண்டினைத்தானே
குறிவைத் தழித்தாரோ எம்மவர்தம் துயர்பட விடாய்
மாலி சந்தியானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குலதெய்வம் வைரவர்

சிவனார் கணையே திரள்தோள் கரிநிறம்
இவன் ஆர்உம் கோவில் சுத்தமிட்டு வணங்குபவரென்றே
மனத்தால் பொங்கிடுவோர் பலரை அறிவாய் ஐயா
உனதால் பெரும் உறக்கம் கொள்வாய் வைரவனே.

## அல்லையம்பதி முருகன்

துன்னை நகர் காவலனாய் மானிடத்
துயர் போக்கமர்ந்தாயே
அன்னை வளர்ப்பில் அசல் வித்தெனப்பட்டவர்
அபலை எனக்காய் வளர்ந்தே - அல்லையம்பதி
மண்ணை கோயில் கொண்டமர்ந்தவரே - என்
மன்னவரோடே எத்தனை நாள் வணங்கினேனே
எண்ணமெலாம் பொய்யாக்கி கடைவழி நாடினாரே
என்னநான்செய இறையே பெய்யேன் அருளை இவற்கே.

## மிந்திரன் அம்மன்

அடர் மரக்குளிர் களிப்பில்
அணையா, ஜோதியாய் வீற்றிருப்பவளே
தொடர் சோதனை போக்கிடுவாயென்றே
துயர் மறந்தே கருமமாற்றுவாரே
படர்கொடியாய் இருந்த எம்பாசவலையோ
பறிபோனதையா பறந்தாரோ நின் அடிக்கே
இடர்களைவாய் பஞ்சு நெஞ்சினுக்கே
மிந்திர அம்மன் சிந்திடேன் அருளைத்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபுர ஆழ்வார்

தேரோட்டியாய் பாரும் வந்தவனே
திரைமேவும் அலைகடலின்
நீரோட்ட வழியால் வல்லிபுரம் அமர்ந்தவரே
நின்பெருமை விளக்கினாயே மாயப்பொருளே
ஊரொட்டியில் போனாலும் இந்த
உத்தமரோ என்வித்தகரே
பாராய் நானோ பயன்காணா பாவி - எனக்கோ
பாதைதெரியவில்லை படைத்திடு இவற்கே நல்லருளை
நாராயணா.

# சந்நிதி முருகன்

ஓதுமுறை அசுர சூரனுக்கே
உலக நீதிக்காய் வேண்டி
கூர்வாள் எடுத்தாய் கொய்திடவே
கொடுமை வென்றாய் கொடியவன் அழிப்பிலே
சீர்பொலிவுறவே இச்சீலனுமே
சிறப்புறு வெள்ளி தோறும் உன்சந்நிதி வருவாரே
பேர் அறுத்து வெற்றிடு குஞ்சு மறந்தே வந்துற்றாரே
பேணிக் காப்பாய் பேதை நெஞ்சினிற்கே அருளை
சந்நிதியானே.

# தேற்றம்

ஆவது பொய் அழிவது மெய்
அகிலத்தில் உண்மத் தத்துவமே அதுவேதானே
பாவ வினைக்கேற்ப படைத்துவிட்டான் பிரமன்எமை
பங்குதனை கொண்டவர் நீவிரும் தான்
காவிவினை செய்திடாது என்றும்
களங்கமில் கணிதத்தின் ஆசானான்
மேவுபுகழ் பஞ்சாட்சரமூர்த்தி சென்றான்
மெலிந்திடாது துயர் நீக்கி ஆறுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் நிலை

மரணங்கள் நிசமானவை ஆனால் எல்லா
மரணங்களும் ஜீரணிக்க முடியாதவை
அன்று ஒரு சனி

ஊர் காட்டி பேர்வாங்கும் ஒற்றர் அழிந்த நாளல்ல சீரிலான் செம்மேலான் தொலைந்த நாளல்ல. பாரதச் சகுனிபோல் இப்பாரினில் உலவி வரும் பாவிகளுக்கு படைகட்டிய நாளல்ல. பொறாமை எனும் நெருப்பை பூமாலையாகக் காட்டி ஊரை ஏமாற்றும் போக்கிலி அழிந்த நாளல்ல. சூதறியா உத்தமர் என்றுயாதும் ஊரே யாவரும் கேளீர் என காதினிக்கப் பேசும் காதர்கள் மறைந்த நாளல்ல.

அஃது

அருள் வேண்டி ஆலயம் புகுந்த அடியவர் தெய்வ தரிசனம் கிடைத்திடாத நாள். அறிவோச்சும் ஒரு பல்கலைக்கழகம் நிரந்தரமாக மூடப்பட்ட நாள் வளர்ந்து உயர் பயன் தரு மரம் துளையிடு புழுவான் தளர்ந்து கதிகெட்ட நாள் கற்றோர் கருத்தில் ஒற்றுமைப்பட்டோர் கதிகலங்கிய நாள் பொடிவிடு கனவுகளில் ஊஞ்சலாடிய அன்பு மனைவியின் மடியில் நெருப்புக்கொட்டிய நாள் பிஞ்சு நெஞ்சங்கள் பேதமறியா நாள் பஞ்சு பஞ்சு என அன்போடு பழகும் தோழர்களை விட்டு அந்தப் பஞ்சு பறந்தநாள்.

ஆம் விதியெனும் சுழல் காற்றில் ஆளுண்ட சருகோ இது. ஓ வென குமுறி எழும் அலைகடலை நாற்புறமும் கொண்ட இலங்கை தீவகற்பத்தில் பல்கலை விருத்தி கான்தகு சேர். சைவத்தமிழ் கொஞ்சிடும் குருதிசிந்திடு தியாகத்தால் கொண்ட இலட்சியம் தான் தங்கிடும் புனித மண் தான் யாழ் நகர்.

திரைகடல் உடுத்த கற்பமாம் ஈழத்திருநாட்டின் சென்னியாம் சுந்தரத்தமிழ் மணக்கும் வடபகுதி மருவிய வடமராட்சியை பெருமை அழகுபெற அலங்கரிக்கும் சிற்றூர்கள் அல்வாய். புலோலி, துன்னாலை.

தேவாலயம், மடாலயம், உலகம்போற்றும் கல்விகற்கும் கல்லூரிகள், கலாசாலைகள், நூல்நிலையங்கள், விவசாயப்பெருநிலங்கள் ஒருங்கே அமைந்த கிராமமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமங்கள், இறைகாத்து, மறைகாத்த அந்தணப் பெருமக்கள், அறிவுசால் கல்விமான்கள், வைத்திய கலாநிதிகள், உலகம் போற்றும் சட்டத்தரணிகள், புத்திஜீவிகள், பொதுநலவாதிகள். அரசியல் வாதிகள், சைவத்தமிழ் கொஞ்சிடும் சைவப்பெரியார்கள், புலவர்கள், குருதிசிந்திடும் தியாகத்தால் கொண்ட இலட்சியம் தான் தங்கிடும் புனித மண் படைத்த கிராமங்களாகும்.

'ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவும் இல்லை
என்றும் நம் நாட்டில் பஞ்சமேயில்லே:'

என்ற பாட்டிற்கு அமைய அல்வாயும் இணைந்தது இதன் கிழக்குப்பக்கத்தில் தொன்மை சேர் மரபில் இலகடி என்னும் பகுதி அமைந்துள்ளது.

இப்பகுதியில் திருவாளர் கந்தப்பர் மாணிக்கம் தனது திருமணப்பருவம் அடைந்ததும் அவ்வூரில் நாகம்மாவை திருமணம் செய்து இல்லறத்தில் இணைந்த வேளையில் ஆண்டவன் அருளால் விநாயகர் நாமம் கொண்ட விநாயகமூர்த்தி(பொறியியலாளர் நியூசிலாந்து) பண்புடனே விவசாயத்தை மேற்கொள்ளும் பாலகிருஷ்ணமூர்த்தி, கணேசமூர்த்தி, சுந்தரவடிவேற் சுந்தரமூர்த்தி, சிவநாமம் கொண்ட பொறியியலாளர் அமரர் தெட்சணாமூர்த்தி, பஞ்சுபோல் மனங்கொண்ட பஞ்சாட்சரமூர்த்தி, சாந்த குணம் படைத்த சகுந்தலாதேவி, பாரதாதேவி (கனடா), கருணை உள்ளம் படைத்த கருணாதேவி, மல்லிகை மொட்டாள் அமரர் மல்லிகாதேவி, பண்பான பத்மாதேவி, லஷ்சுமியின் நாமம் தனலஷ்மிதேவி(ஆசிரியை இமையாணன் அ.த.க பாடசாலை) ஆகிய பன்னிருவரை பெற்று மகிழ்ந்தார்.

அமரர் பஞ்சாட்சரமூர்த்தி சிறுவயது தொட்டே நற்பண்பும், சிறந்த சிந்தனையாளராக வளர்ந்து தன்னுடைய ஆரம்பக்கல்வியை அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் தொடர்ந்து மேற்படிப்பை யாழ் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டு விஞ்ஞானமானி (B.Sc) பட்டத்தினையும் பெற்றார். குறுகிய காலத்தில் 1990ம் ஆண்டு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலத்திற்கு முதல் நியமனம் பெற்று ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் ஒளி நிறைந்த புலோலி ஆலடியைச் சேர்ந்த கந்தப்பர் வீரகத்திப்பிள்ளை சின்னத்தம்பி மகள் பாக்கியத்தை திருமணம் செய்து V.K.தம்பி என அழைக்கப்படும் அமரர் கதிர்காமத்தம்பி (இளைப்பாறிய பிரதமலிகிதர்), சிவநாமம் கொண்ட நடராசாவையும் (பொலிஸ் உத்தியோகத்தர்) செல்வங்களாகப் பெற்றெடுத்தனர்.

சிறுவயதில் இவர்கள் பெற்றவளை இழந்தனர். பிள்ளைகளின் நலனுக்காக வேலுப்பிள்ளை, அம்பிகை என்பவரை மறுமணம் செய்து கொண்டார். இவர்கள் அம்மன் நாமம் புனைந்த மகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகிய புத்திரிகளைப் பெற்றெடுத்தனர். இவர்கள் இருவரும் தமது 12,10 ஆவது வயதுகளில் தந்தையைப் பறிகொடுத்தனர். தாயின் அரவணைப்பில் வளர்ந்த இருவரும் தமது ஆரம்பக்கல்வியை துன்னாலை மேற்கு மெ.மி.த.க பாடசாலையிலும் தொடர்ந்தனர். தொடர்ந்து பட்டப்படிப்பிற்காக யாழ் பல்கலைக்கழகம் சென்று மகேஸ்வரி விஞ்ஞானமானி (B.Sc) பட்டத்தையும், புவனேஸ்வரி கலைமாணி (B.A) பட்டத்தையும் பெற்றார்கள். மகேஸ்வரி குறுகிய காலத்தில் நுவரேலியா சென்சேவியர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையேற்றார். புவனேஸ்வரி 1990 ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலத்திற்கு முதல் நியமனம் பெற்று ஆசிரிய சேவையில் காலடி எடுத்து வைத்தார்.

திருமண காலம் வந்ததும் அமரர் பஞ்சாட்சரமூர்த்தியும் புவனேஸ்வரியும் மனமொத்த இருவீட்டார் சம்மதத்துடன் 29.04.1992 இல் இல்லறம் இணைந்து கொண்டார்கள். இவர்கள் இல்லற நீரோட்டத்தில் கௌஷிகேசன் எனும் ஆண் மகவையும் மதுஷா எனும் பெண் மகவையும் பெற்றெடுத்தனர்.

அமரர் பஞ்சாட்சரமூர்த்தியின் கல்வி முன்னேற்றத்தால் டிப்ளோமா பட்டத்தையும் பெற்று திறமையான கணித ஆசானாக விளங்கினார். இவர் தனது சேவையை புலோலி மெ.மி.த.க பாடசாலையிலும், தொடர்ந்து வடமராட்சி இந்து மகளிர்கல்லூரியிலும் தொடர்ந்தார். பல தனியார் கல்வி நிலையங்களில் கணிதஆசானாகவும் வணிகப்புள்ளிவிபரவியல் ஆசானாகவும் விளங்கினார். குடும்ப குதூகலத்தில் அளவுகடந்த மகிழ்ச்சியில் திளைத்து நின்ற பஞ்சாட்சரமூர்த்தி எதிர் காலத்தைப் பற்றி கண்ட கனவுகள் தான் எத்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோ பரிதாபம் விதியெனும் வடிவமுடனே குமுறும் எரிமலையாக கொந்தளிக்கும் கடலாக பஞ்சாட்சரமூர்த்தியின் குடும்பத்திற்கு நேர்ந்த துயரத்தை வடிப்பதற்கு வேறு வார்த்தை ஏதுதானோ. மங்கை புவனேஸ்வரி மயக்கமுற்றாள். எதிர்பாராத அந்த இயந்திர விபத்தால் யாழ் மருத்துவ மனைக்கு பஞ்சாட்சரமூர்த்தி எடுத்துச்செல்லப்பட்டார்.

தீவிர சிகிச்சையின் பின் என்னமோ தப்பிப் பிழைத்து விட்டார் பஞ்சாட்சரமூர்த்தி என்று நின்மதிப்பெருமூச்சு விட்டார் மனைவி புவனஸ்வரி. பதினைந்து நாட்கள் பகலிரவாய் கணவன் பக்கம் இருந்து சுகதுக்கம் பகிர்ந்தார். உண்ணாமல் உறங்காமல் கண்விழித்தே உளம் நின்ற கணவன் நீட்டி ஆயுளுக்காய் அபய கரம் நீட்டி அந்த இறைவனைக் கெஞ்சினாள். திடீரென ஒருநாள் தாங்கவெண்ணா வேதனையால் தவித்தார் பஞ்சாட்சரமூர்த்தி கூறுவதற்கு ஒன்றுமில்லை என்ற நிலைக்கு மோசமாய் விட்டதை படைத்த இறைவனைத்தவிர யாராலும் உணரமுடியவில்லை. அன்றைய பொழுது ஓரிரு மணியில் சொந்தங்களை சிலையாக்கி விட்டார்.

துடித்தாள் மனைவி பத்துமாதம் சுமந்து பெற்ற தாய்க்குக்கூட அவள் இப்படி துடித்திருக்கமாட்டாள் என கண்டோர் கூவி அழுதனர். அந்த வெண்புறா பக்கத்துணை இழந்தது. அந்த ஆத்ம சுத்திக்கு இதயத்தில் எதுவும் அறியாஇளம் பிஞ்சுக்கள் தங்களிடமே கேள்விக்கணை தொடுத்தனர். சொந்தங்கள் துடித்தன, சகோதரங்கள் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கினர்.

இரத்தத்தின் இரத்தங்கள் சோக மழையில் நனைய பஞ்சாட்சரம் அமரராக ஆசிரியப் பெருந்தகையோர் புடை சூழ மாணவ மணிகள் சோக கீதம் இசைக்க, கண்ணீர்ப் பிரசுரம் கவலை வெளியிட அமரர் பஞ்சாட்சரமூர்த்தி அவர்கள் தன் வேலை முடிந்ததென் தனிவழி புறப்பட்டார்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் நிலை

புவனேஸ்வரி (B.A) பட்டதாரி ஆசிரியை
புலோலி மெ.த.க பாடசாலை

## வானுலகம் சென்ற என் தெய்வத்திற்கு

பதினொரு வருடங்களாய்
பாசமழை பொழிந்து விட்டு
பாதிவழியில் பரிதவிக்க விட்டுச்சென்ற
பாசத்தின் திருவுருவே

கைபிடித்த நாள்முதலாய்
கண்ணிமை போல் எனைக்காத்து
கடைசிக்காலம் வரை
கலங்காமல் காப்பேன் என்று
கூறிய உறுதிமொழி போனதெங்கே என் தெய்வமே

இடியொன்று இப்படியென் தலைமீது விழுமென்று
ஒருகணமும் எண்ணியிருக்கவில்லை என் தெய்வமே
தன்னந்தனியாக நான் இங்கிருந்து கதறியழும்
காட்சியாய் காண ஓடிவருவாயோ ஐயா

பிஞ்சுக்குழந்தைகளை என்னிடம் ஒப்படைத்து
பிரிந்து போக நீங்கள் எண்ணியதேன் ஐயா
ஆறுதல் கூறும் நீங்களே எனக்கு
ஆறுதல் தராமல் அந்தரத்தில் விட்டுவிட்டுப் போனதேனோ

காலைவிடியுமுன்னர் கனிவாக எனைஎழுப்பி
கடமைக்குச் செல்வதற்கான பலகடமைகள் செய்து தந்து
பாடசாலை வாசலிலே பக்குவமாய் இறக்கி விட்டு
போகும் காட்சி எனை நிலைகுலைய வைக்குதையா

பாடசாலை விட்டு வந்து ரியூசனுக்கு போவதுவும்
பலபல இடங்களுக்கு எங்களை கூட்டிச் செல்வதும்
பலபலகதைகள் கூறி நீங்கள் பாசத்தைப் பொழிவதும்
படமாக நின்று என்மனதைப் பதைபதைக்க வைக்குதையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை ஆசைகளைக் காட்டி வளர்த்திருந்தாய்
எத்தனை கனவுகளை உம் மனதில் கண்டிருந்தாய்
எதிர்கால வாழ்வு ஒளிமயமாய் இருக்குமென்று
எதிர்பார்த்தெல்லாம் ஏமாற்றமாய் ஆனதையா

Accident எங்களை அதிர்ச்சியடைய வைத்ததையா
ஆபத்து இல்லையென்று தேற்றினாய் எம்மனதை
விளையாட்டுப் போட்டிக்கு விருப்புடனே அனுப்பிவைத்தாய்
டாக்டரிடம் கொண்டு சென்ற செய்தி கேட்டவுடன்
ஓடிவந்தேன் ஐயா உயிரோடு பார்க்கவென்று
ஒருசொல்லும் கூறாமல் ஓடிமறைந்தாய் ஐயா

கோவம் வந்ததில்லை, கொடுஞ்சொல்லோ கேட்டதில்லை
கவலையோ பட்டதில்லை கண்ணீரோ விட்டதில்லை
கடைசிநேரம் என்றாலும் கண்ணிலே கண்டதில்லை
கடைசி வார்த்தை கூறாமல் கண்மூடிவிட்டாய் ஐயா

கண்ணிறைந்த கணவன் என் கண்முன்னால் இருக்கிறான்
கவலை ஏதுமின்றி காலத்தை கழித்து வந்தேன்
காலமெல்லாம் எங்களை கதறிஅழவிட்டு
காலனவன் கையிலே அகப்பட்டு போனாய் ஐயா

தேம்புகிறோம் ஐயனே தேறவழியில்லையையா
ஆற்றுபவர் இல்லாமல் ஆறவழியில்லை ஐயா
உங்கள் காலடி ஓசையைக் காண்பது எப்போஐயா
காலன் வரும்வரைக்கும் கரைந்துகொண்டே யிருப்பேன் ஐயா

மனைவி பிள்ளைகளைப் பார்க்க மனம்வராமல்
மறுக்காமல் நீங்கள் மறுஉலகம் போனதேனோ
பிஞ்சுக்குழந்தைகளும் நானும் படும் துயரம்
பார்க்க ஒருகனம் வரமாட்டீரோ ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் கௌஷிகேசனின் கண்ணீர்த்துளிகள்

அப்பா அப்பா என்றால்
அன்புக்கரம் நீட்டி - எங்களை
அணைத்து முத்தமிடும் எங்கள்
அன்பான அப்பாவே

புலமைப்பரிசில் சோதனை வரப்போகிறது
கவனமாய்ப் படியடா என்று கூறிய
வார்த்தைதான் எங்கே அப்பா?

கணக்குச் சொல்லித்தந்து கஷ்டப்படாமல்
நான் படிக்க வைப்பேன் என்ற
கனிந்தமொழி எங்கே அப்பா?

ஆறாம் வகுப்பில் ஹாட்லிக் கல்லூரியில்
சேர்த்துவிட்டு கூட்டிவருவேன் என்ற
கொஞ்சும்மொழி எங்கே அப்பா?

சின்னவயதிலேயே கம்பியூட்டர் சொல்லித்தந்து
கணனி வழியில் வல்லுநர் ஆக்குவேன் என்ற
கற்பனைக் கனவு இன்று எங்கே அப்பா?

அப்பா இருக்கின்றார் எனக்கென்ன என்று
துணிவோடு இருந்தேன் அப்பா
நான் எதிர்பார்த்து இருந்ததெல்லாம் - எனக்கு
ஏமாற்றம் ஆனதப்பா.

அப்பா உங்கள் நினைவு எங்கள் உள்ளத்தை உருக்குதப்பா
அப்பா நான் உங்கள் கனவுகளை நனவாக்கித் தீருவேனப்பா
வானுலகில் என்றாலும் நாம் வாழும்வரை எங்களுக்கு உதவியாக
இருந்திடுங்கள் அப்பா. அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள் மதுஷா

விதம்விதமாய் சட்டையென்ன காற்சதங்கை யென்ன
பதம் செய் பணியாரம் பட்டினமெல்லாம் காட்டினீர்களே
மதம் பிடித்து வந்ததோ மாயமான் உருவில்
மோட்டார் சைக்கிளுமே
நிதம் தொழுதிடு தெய்வம் நீங்களே அப்பா

ஊரெல்லாம் கூடி அப்பா அப்பா
ஊர்ப்பெரு கோவில் திருவிழாக்கூட்டம் போல்
தேர்போல் ஏதோ கட்டி திறப்பிலா பெட்டியில் பூட்டி
தெருவீதி அழைத்துச் சென்றனர் உங்களை அப்பா
கார் அசைந்தது கண்டேன் அப்பா
கடைசி ஊர்வலம் என்றதும் நின்றேன் அப்பா

# உடன் பிறந்த ஆண் சகோதரர்கள்

வினாயகமூர்த்தி(பொறியியலாளர்) நியூசிலாந்து, பாலகிருஷ்ணமூர்த்தி,
கணேசமூர்த்தி, சுந்தரமூர்த்தி(மல்லாவி)

அன்று ஒரு பொறியியல் தெட்சணா
அரக்கர் கை அகப்பட்ட போதே - நீ
நின்றே அழுதாயே நிலை தடுமாறி
நீள் பொக்கிசம் அழிந்ததென்றே
இன்று நீயும் அழிந்தாயோ தம்பி
நாம் என்ன சொல்லி அழ
என்றும் எமக்குதவும் வல்லமை நீயென்றே
இருந்த எமக்கு இப்படியோர் இடியே.

அதிஉயர் ஆலமரம் நீ தம்பி
அதன் கீழ் நாமோ நிலத்தாவரம் தம்பி
மதியுடைப் பெருந்தகையே தம்பி நீ
மங்கா சுடர் விடுவாய் என்றே
பதியுடை பரமசிவனே ஐயாவே
பலநாள் வேண்டினோமே இன்றோ
கொதிநீர் குளியலில் வெந்து விட்டோமே
கொடுமை கொடுமை பொறுக்கமாட்டோமே - ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்

(பெண் சகோதரர்கள்)

சகுந்தலாதேவி, பாரதாதேவி(கனடா), கருணாதேவி, பத்மாதேவி,
தனலட்சுமிதேவி(ஆசிரியை இமையாணன் அ.த.க.பாடசாலை)

ஒன்றாய்ப் படுத்து நன்றாய் சுவைத்து நின்றோமே நாமே
வண்டாய்ப் பறந்து வென்றாய் பட்டம் B.Sc தானே
குன்றாய் இரண்டின் குரலொலி கண்டாய் தம்பி
இன்றேன் சென்றாய் இடைவேளைப் பயணம் ஐயகோ.

பொல்லால் அடித்தாலும் உன்கட்டுடல் மேனியில்
செல்லாதே அதன் தாக்கமும் இலகுவில் ஐயா
வில்லாளன் விசயன் உன் விடிமுகம் எங்கே காண்போம்
எல்லையில் நின்றானோ எமனும் எந்திர வடிவிலே.

# மாமியார் அம்பிகை

ஒருகண் என்மகள் எனில் மறுகண் நீயே மருகா
இருகண்களும் எனக்கோ சாமியிட்ட தீபங்களே ஐயகோ
உருதான் அழிந்ததோ உதயநிலவே ஐயா
குருவாய் வணங்கி எனை குற்றுயிராய் விட்டுச் சென்றனீரோ

படித்து ஆளாக்கி பட்டமும் பெற்று மகளை
பிடித்து கைகொடுத்து பிள்ளைகளையும் பெற்று மருகா
கொடுத்து வைத்தவளெனக் கொட்டம் அடித்தேனே
துடித்து மாட்டனையோ ஐயயோ மகள் துணை யாரோ.

# மைத்துனர் மைத்துனிமார்

சிவானந்தம், யோகராசா(கனடா) தெய்வேந்திரநாதன் (மாயவன் ஸ்ரோர்ஸ் நெல்லியடி), சிவதாசன் (கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்), தயாபரன் சிகரட் ஏகவிநியோகஸ்தர்). நடராசா, சந்திரவதனா (நியூசிலாந்து) தனலட்சுமி, வளர்மதி, சிறீரஞ்சினி (வைத்தியசாலை மல்லாவி) மகேஸ்வரி (நோர்வே)

தங்கை எட்டிய வாழ்வு ஏன்சொன்னால் என்ன மச்சானே
எங்கள் எவற்கும் எட்டாத ஒன்றல்லவோ
கங்கை வேடன் சீதையைக் காத்ததற்கொப்பல்லவோ
எங்கே சென்றீரோ மச்சானே என்ன செய்வோம் நாமே.

வானிலைச் சேதி எமை வாட்டி எடுக்குதையா
தேனமுதக் கோப்பையே விசமுட்டம் கண்டதோ
மானிடப் பிறவியே பொய்யென எண்ண வைத்தே
ஊன் உடலம் காணா கோரம் இதுவல்லவோ.

# மைத்துனி புலம்பல்

(B.Sc Dip.in.Edu)

திருமதி. கா.மகேஸ்வரி (BS.CDspsnedu) நோர்வே

ஆனிமாதம் எப்பவருமென்று அங்கலாய்ப்புடனே இருந்தேன் ஐயோ
அவலத்தின் ஒலியோடு அழைப்புமணி அடித்ததையோ
நிழல்தரும் விருட்சம் ஆக நிற்கின்றாய் என்றிருந்தேன்
நிலைசாய்ந்துபோக விதியும் ஆச்சோ ஐயோ.

வீட்டிற்கு வந்த விடிவிளக்கே முதல்விளக்கே
விதியின் விளையாட்டால் இருள்வந்து சூழ்ந்ததையோ
என் சின்னமகளும் சித்தப்பா என்றழைப்பாள்
எம் சித்தப்பாவின் குரரொலியைக் காண்பதெப்போ ஐயோ! ஐயோ!

ஓடிவந்து உயிரோடு பார்த்திருக்க இருந்தேன் ஐயோ
ஒரு கதையும் கேட்காத பாவியானேன் ஐயோ
தங்கைக்கு வாய்த்த தரளம் என்றிருந்தேன் ஐயோ
தவிக்கவிட்டு தனியுலகம் போனதேன் ஐயோ ஐயோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர் நடராசா புலம்பல்

(வெஸ்டன் நகைமாளிகை)

பஞ்சு என நான் அழைத்தேன்
பண்பாகக் காட்டும் அழகுமுகம்
அச்சாகப் பதிந்திருக்கும்
அன்பு கண்டு நான் வியந்தேன்
மெச்சாத பேர்கள் இல்லை
மேதினியில் உனைப் பிரிந்தேன்
எச்சாவு வந்ததையோ
இனி உம்மைக் காண்பதெப்போ

# சகலன் புலம்பல்

சி.கார்த்திகேசு (தொழிநுட்பவியலாளர், நோர்வே)

படத்தில்தான் பஞ்சு உங்கள் உருவம் கண்டேன்
தொலைபேசிமூலம் தான் உங்கள் குரலைக் கேட்டேன்
நேராகப் பார்த்துக் கதைக்க ஆசைப்பட்டேன்
நிலையிழந்து நானும் இங்கு கலங்குகின்றேன்.

ஓடிவந்து உங்களை நாம் பார்ப்போமென்று
கூடிநாம் மகிழ்ந்திருந்தோம் நாங்கள் இங்கு
தேடிவந்து உங்கும் நாம் காணமாட்டோம்
ஓடியே போனாய் பஞ்சு எப்போ காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

பாஸ்கரன்,(பொறியியலாளர் சிங்கப்பூர்)வசீகரன், யசோதா, யோகேஸ்வரன் (தம்பி) நிவேதா, கேதீஸ்வரன், ஸ்ரீமதி, சதீஸ்குமார். கார்த்திகா (கனடா) ஜலஜா (கனடா) மயூரதி (கனடா) தனேந்திரன், குணேந்திரன், சபேசன் தாட்சாயினி, ஜெயராம், மனுராஜ், கிருக்ஷன், ராகவன், நிஷாந்)

பஞ்சுமாமா பிரிந்தெங்கே சென்றீர்களோ
நெஞ்சுருகி வேகிறதே நேற்றுக் கூடி இருந்ததையும்
மறந்தனையோ
கெஞ்சினோம் மாமா கீதையுரை மாயவனிடத்தே
எஞ்சியதோ எமலோகச்சங்கதிதான் ஐயகோ.

பல்லுக் கழட்டிய பாம்பாய் விட்டோமே
மல்லுகிழுத்து சண்டையிட்டு மாய்த்து விட்டார்களோ
நெல்லில் களையென்றால் நெடுநாள் துயரமில்லை மாமா
புல்லிருக்க நெல் போனதெனில் பொறுக்கலாமோ
தெய்வம் இதை

# பெறாமக்கள் புலம்பல்

(சன்ஜா (நோர்வே), பிரதீபன் (நியூசிலாந்து), வசீகரன் (நியூசிலாந்து), அரவிந்தன்(நியூசிலாந்து), வினோஜா(நியூசிலாந்து), நிருஷா, ஷாமினி, நிலோஜினி, ஜனனி, டிலக்ஷன், சிவசூரியன்)

பெற்றவர்கூட உங்களுக்கிணையோ பெறாதந்தையே
சுற்றமென இருந்தும் உங்கள் சுகம் யாரிடம் காண்போமோ
சித்தமென இருந்தோமே உங்கள் தரிசனமே ஐயோ
முத்தமிட்ட அந்த முகம் எங்கே ஐயையோ.

என்ன வேலை இருந்திடினும் ஓர்வேளையாவது
எமைவந்து பார்க்க மறவீர்களே சித்தப்பா
சொன்ன புத்தகமோ கொப்பியோ ஐயா
சூதறியா இதயமே சுமந்தே வருவீர்களே
சின்னக்குஞ்சு இரண்டும் பஞ்சு சித்தப்பா
திசையறியா ஏங்குதப்பா
என்னதான் அவசரம் வந்ததோ
இத்தனை பேரையும் தவிக்கவிடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுவிட்ட சகோதரங்கள்

*பேதமின்றி வீடு வந்து எமைப் பேணி நடப்பாயே*
*யாதும் நமதென வாய்தம் உரைத்திடுமே*
*காதும் செவிடாய் விட்டதே கடம்பா நீ இன்றியே*
*ஏதெம்மை மறந்தாயோ விபத்தால் மாண்டனையோ*

# உற்றார் உறவினர் நண்பர்கள்

*கடமை முடிக்க கடன் படு நேரம் இலாத போதும்*
*உடமைபெயன்றோ ஊரார் என்றோ வருவோர்க்கே*
*மடமை உடம்கொளா மனத்தால் சேவை பல செய்வாயே*
*உடமை எம் எலாமே மறந்தே எங்கே சுகம் தேடினாயோ.*

## துன்னாலை வடக்கு மிந்திரன் அம்மன் ஆலய தேவஸ்தானம்
## இரங்கல் உரை

அல்வாய் இலகடியை பிறப்பிடமாகவும் துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்டு பஞ்சு என பலராலும் செல்லமாக அழைக்கப்பட்ட இவர் மனித நேயம் உடையவர்.

01.03.2003 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். 'தோற்றிற் புகழொடு தோன்றுக' என்பதற்கு இணங்க வாழ்ந்தவர்.

உலகம் ஒரு நாடகமேடை. அதில் நாம் நடிகர்கள்நாடகம் முடிந்ததும் இறங்க வேண்டும். இது தான் மனிதவாழ்வு.

சிவராத்திரி அன்று சிவபதமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமதுஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

*சி. இந்திரராஜாக்குருக்கள்*
*பரம்பரைப் பூசகரும் ஆதீன தர்மகர்த்தாவும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இதயக்குமுறல்

அன்பிற்கு இலக்கணமாய்
பண்பிற்கு இருப்பிடமாய்
பாசத்திற்கு இணையற்றவராய்
குடும்பத்திற்கு ஒளி விளக்காய்
பாங்காய் எம் சபையினிலே
களிப்புடன் நின்ற மைத்துனரே
திரியாக எரிந்து சோதரி உயிர் வாழ ஒளியானீர்
ஆலமரமாய் நீர் ஆகி- எம்
அனைவருக்கும் நிழல் தந்த மைத்துனரே
சோதரியை அந்தரத்தில் தவிக்கவிட்டு
பிள்ளைகளை கலங்க விட்டு
வாழும் வயதினிலே மைத்துனரே
எம் அனைவரையும் கண்ணீரில் மிதக்க விட்டு
மைத்துனரே பஞ்சு எங்கு சென்றாய்

அப்பாவின் அத்தான் என்று இருந்தவேளை
அருமையாம் எமக்கொரு மாமா வென்று
தப்பாமல் நீயிருந்து தாலாட்டி கொஞ்சி வாழ்த்தி
தளர்விலா பூப்புனித நீராட்டு தன்னை
எப்போதும் செய்வாய் என நாம் இருந்தோம்
ஏன் எம்மை ஏமாற்றி சென்றாய் மாமா
செப்பிய உன் வார்த்தை எல்லாம் எங்கேயாச்சு
செகத்தினிலே இனி மாமா யார் எமக்கு
தந்தையை இழந்தபோதும் தாயுடன் இருந்தவேளை
தந்தையாய் இருந்து எம்மை

சிந்தையே கலக்கமின்றி சிறப்புடன் பார்த்த - எங்கள்
சித்தப்பா என்ற பேரை சீருடன் பெற்றாய் தானே
அந்தமில் அன்பு கொண்டு ஆறுதல் தந்த உன்னை
அதிசய விபத்து அது அரவணைத்த தேனோவென்று
புந்தயில் நாளும் வைத்து புலம்புவது அல்லால்
பூரிப்பாய் எம்மை யாரும் தேற்றுவார் இல்லைத்தானே

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமென்ற
ஏற்றமிகு தத்துவத்தை மனத்திலூன்றி
கண் இனிய கணிதத்தை கற்பித்த மாமா, சித்தப்பாவே
கற்கை தனை நாம் மறவோம் கண்ணுறங்கோம்
மண்ணதனை நீவிட்டகன்ற போதும்
மனத்தினிலே பதிந்த கணிதம் தன்னை
எண்ணரிய வருடங்கள் சென்றாலும்தான்
எளிதினில் மறப்போமா? எங்கு சென்றாய்.

**துன்னாலையூர் திக்கம்**
**31. 03. 2003**

**உங்கள் பிரிவால் வாடும்.**
**வே. செந்தில்வேல் குடும்பம்**
**சகோதர சகோதரிகள் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முகிழ்த்த மாண்பினர்

துன்னையில் துணை கொண்டு தூய இல்லறம் வாழ்ந்து
எண்ணரிய பண்புடனே ஏற்புடைய நல்லாசார்!
தண்ணொளியில் வாழ்ந்த தடயங்களை தாம் வருடி!
கண்ணெகிழ்ந்து கவி காணிக்கை யாக்குகிறோம்

மண்மகிழ வந்த மாண்பினராய்
இன்ப முகம் காட்டி நல் கதைபேசி
துன்ப வேளைகளில் துணை நின்று துயர் போக்கும்
பண்பும் பாங்கும் 'பஞ்சு மாஸ்ரரின்' இயல்பு

அன்னவர் ஆத்மா ஆண்டவன் அடிசேர
விண்ணவர் மண்ணவர் யாவரும் போற்றும்
புண்ணிய நாளாம் புனிதநல் தினமாம்
நண்ணியநல் சிவராத்திரியில் பிரிந்ததுவே

மலர்ந்த மலர்கள் மடியும் நிகழ்வு
மனிதர்மனங்களில் பதியாத தவறு
சேர்ந்த உறவுகள் பிரியும் என்று
சோர்ந்த உள்ளங்கள் உணர்வது நன்று

வாழ்ந்த காலங்களின் வசந்த வருடங்களில்
வாழும் நாட்களின் வருத்தம் மறையவே
நாளும் இறைவனை நாமும் வேண்டுகிறோம்
வாழ்ந்த காலங்கள் சிலதெனினும் ~ அவர்

வாழ்க்கை நெறி சிறந்ததுவே
ஆழ்ந்த துயர் நீங்கி அவர் குடும்பம்
மீண்டு மனவமைதி பெறவே
வேண்டுகின்றோம் இறையை இறைஞ்சுகின்றோம்

*சாரதாபீட சகோதரர் சார்பாக*
*சிவப்பிரம்மஸ்ரீ ராம். சபாநாதக்குருக்கள்*
*துன்னாலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயத்திலிருந்து

போற்றின் அரியலை போற்றல் கடுத்த பின்
தேற்றுதல் யார்க்கும் அரிது

அன்பிற்கும் பண்பிற்கும் உரித்தான மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி அவர்கள் வாழ்க்கையில் நிகழ்த்திய சாதனைகள் பல. நேர்மையும் நிதானமும் கொண்டு தனக்கென ஒரேகோட்டின் கீழ் பூரண நிறைகுடமாக திகழ்ந்தவர். உரிய வேளையில் தனது கடமைகளை ஒழுங்காகப் பூர்த்தி செய்தும், மாணவர்களுக்கெல்லாம் அன்போடும் அரவணைப்போடும் கல்வியை கற்பித்தும், இல்லற வாழ்க்கையிலும் சரி தன் கல்விப் பணியிலும் சரி தன் கடமைகளை சிறப்புடனே நிறைவேற்றியவர்.

எனது குருத்துவப் பணியில் இவர்களின் திருமணத்தை நடத்தி வைத்ததும் இப்போதும் நினைவுக்கு வருகிறது. இவருடைய செய்தியைக் கேட்டதும் பெரும் அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் தந்தது. உடன் ஓடிவர முடியாமல் தவித்தேன். பிறந்தார் யாரும் மாநிலத்தில் இறப்பார் நிச்சயம். ஆனால் சிலருடைய இழப்பு மறக்க முடியாத ஒன்றாகும். இவருடைய இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல சமூகத்திற்கும் தான். எங்கள் எல்லோரையும் கலங்க வைத்து தான் எல்லோருடனும் கதைத்தேன் என்ற மன நிறைவுடன் பந்த பாசங்களைப் பிரிந்து மண்ணுலக வாழ்வை நீக்கி விண்ணுலக வாழ்வை நோக்கிச் சென்றார் போலும்.

அவரின் ஆத்மா சூக்குமநிலை நீங்கி சிவன் பாதம் அடையும் நேரம் அவருடைய குடும்பத்தாரோடு சேர்ந்து சாந்தி பெற பிரார்த்தித்து என் இதயத்தில் உள்ளதை சாரதாபீட சார்பில் சமர்ப்பிக்கின்றேன்.

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவர் - யாவரும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

*Surrey K. T. 17.2 NE*
*U.K*
*31.03.2003*

*ராம் கெங்காதரக் குருக்கள்*
*(மயிலையா)*
*சாரதாபீடகுடும்பத்தினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை வீரர் அமரர் மா. பஞ்சாட்சரமூர்த்தி

கடமை கண்ணியம் கட்டுப்பாடு மிக்க கணித ஆசான் மா. பஞ்சாட்சரமூர்த்தியின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு பெரும் துயரம் அடைந்தேன். கணிதம் கற்பிப்பதில் தனக்கென ஒரு முறையைப் பின்பற்றி மாணவர்களுக்கு இலகுவாகக் கற்பிக்கும் சிறந்த ஆசான்.

மாணவர்களுடன் அன்பாகவும், பண்பாகவும் பழகி மாணவர்களை வழிகாட்டி கலங்கரை விளக்காக திகழ்ந்தார்.பெரியோரை மதித்துப் போற்றும் பண்பாளன். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த ஆசிரிய இரத்தினம். பாடசாலையின் சகல தொழிற்பாடுகளிலும் பங்கு கொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவிய ஒருவர்.

அன்னாரின் இழப்பினால் மீளாத்துயரில் துவளும் அவரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்கின்றேன். அமரரின் ஆத்மா சாந்தியடைய நாம் யாவரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அல்வாய் மேற்கு,
அல்வாய்
2003.03.24

*சி. சிவராசா*
***இளைப்பாறிய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,***
***யாழ்ப்பாணம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரால் நேசிக்கப்பட்ட ஓர் ஆசிரியர்

திரு.மா.பஞ்சாட்சரமூர்த்தி விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியரை அவர் நியமனக் காலத்திலிருந்து எனக்கு தெரியும். மிகவும் அமைதியான ஆனால் கடமை எண்ணம் கொண்ட ஆசிரியர். மாணவர்களால் மதிக்கப்பட்ட ஓர் ஆசிரியர். மாணவர்களை நேசித்துக் கற்பித்த ஓர் ஆசிரியர். கஷ்டப்பிரதேசமான வெற்றிலைக்கோணியில் உள் ளமாணவர்களின் கல்வி வெற்றிக்காக உழைத்தவர். நீண்ட தூரம் சைக்கிளிற் சென்று களைப்பேதும் இன்றி வெற்றிலைக்கேணியில் கற்பித்ததை நான் நேரடியாகப் பார்த்துள்ளேன். அப்பகுதியில் அவரிடம் கற்ற மாணவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீடத்தில் முதனிலை மாணவர்களாக உள்ளமை இந்த அமரத்துவம் அடைந்த ஆசிரியரின் ஆன்மாவிற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். அதனைத் தொடர்ந்து, வட இந்துமகளிர் கல்லூரியில் சிறப்பாகக் கடமையாற்றியவர். அதிபரின் வலதுகரமாக இருந்து பாடசாலையின் முகாமை சிறப்புற உழைத்தவர் என்பது ஓர் சிறப்பான பண்பாகும். சகலராலும் அவர் ஆளுமை, சேவை என்பன மதிக்கப்பட்டன. சிறியவயதில் இவர் இழப்பு கல்விச்சமூகம் முழுவதிற்கும் ஏற்பட்ட இழப்பாகவே கருதப்படுகின்றது. மீள இவ்வாசிரியரைப் பெற முடியாத நிலையில் துயரில் நாம் ஆழ்ந்துள்ளோம். இது அவர் குடும்பத்திற்கு மட்டுமல்லாது தனிப்பட்ட முறையில்எ னக்கும் ஓர் பேரிழப்புத்தான். அவ்வேளையில் அவரது குடும்பத்திற்கு எம்மால் ஆறுதல் மட்டுமே கூறக்கூடியதாக உள்ளது. அவரது சிறுபிள்ளைகளுக்குத் தந்தையின் ஆதரவு இல்லை என்பதை நினைக்கும்போது இதயம் நொருங்கும் ஓர் உணர்வுதான். அவரது ஆத்மா சாந்தியடைய எமது பிரார்த்தனைகள்.

A man who lived with wisdom left us with Vacuum. May a big storm will fill this Vacuum and console his soul.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*வே. தி. செல்வரத்தினம்,*
*வலயக்கல்விப் பணிப்பாளர்,*
*வடமராட்சி*

2003.03.28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நினைவு விட்டகலா ஆசிரியர் திரு. மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி

வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத சோகத்தோடு இச் செய்தியை வரைகிறேன். கேட்பதற்கு கொடுமையான செய்தி எம் உள்ளத்தை உறையவைத்த செய்தி. இளவயதில் பஞ்சாட்சரமூர்த்தி இறைவனடி சேர்ந்த செய்தி.

திரு. மா. பஞ்சாட்சரமூர்த்தியை அவர் மனைவி ஞானாசாரியார் கல்லூரியில் கற்பித்தகாலம் தொடக்கம் ஏறக்குறைய பத்து வருடங்களாகத் தெரியும். ஆசிரியர் அவர்கள் ஒரு ஆசானுக்குரிய தோற்றமும் ஆளுமையும் கொண்டவர். புன்முறுவல் பூத்த முகத்துடன் எப்பொழுதும் காட்சி தருவார். அமைதியானவர், அடக்கமானவர். வசதியாக வாழ்ந்த போதிலும் மிகவும் எளிமையானவர். மற்றவர்களை மதித்து நடப்பவர். ஆசிரிய சேவைக்கென்றே தன்னை அர்ப்பணித்தவர். தனக்குரிய பாடங்களைத் தெளிவாகக் கற்பிக்கும் வல்லமை பெற்றிருந்தார். மாணவரிடம் அவருக்கு அளவுகடந்த அன்பும், அதேநேரம் கண்டிக்கும் தன்மையும் காணப்பட்டது. சாதாரண மனிதருக்குரிய போட்டி, பொறாமை, கோபம் முதலிய குணங்களற்று நேர்மை, நிதானம், நிறைந்த உயர்ந்த ஆசிரியராக விளங்கினார்.

மேன்மேலும் கல்விகற்கும் அவா உடையவர். தகவல் தொழில்நுட்பத் (கம்பியூட்டர்) துறையில் கல்விகற்று மாணவர்களுக்கு சிறந்த ஆசானாக இருந்தார். புள்ளிவிபரவியல் பாடத்தை சிறப்பாக மாணவர்களுக்கு கற்பித்தார். பாடசாலையில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் அனைத்திலும் பங்குபற்றி பாடசாலை நிர்வாகத்திற்கு உதவினார்.

திரு. மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி ஆசிரியர் அவர்கள் சிறந்த ஆசிரியராக மட்டுமன்றி அன்புமிக்க கடமையுணர்ச்சியுடைய ஒரு சிறந்த கணவராக, பாசம் மிக்க ஒரு தந்தையாகவும் விளங்கியவர். சமூகத்தில் யாவராலும் மதிக்கப் பட்டவர். ஆசிரியரது மரணம் அவர் கற்பித்த வடஇந்து மகளிர் கல்லூரிக்கும், வடமராட்சி கல்வி வலயத்திற்குமே தாங்கமுடியாத ஓர் பேரிழப்பு ஆகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தினுள் அடிசேர்ந்த
திரு. மா. பஞ்சாட்சரமூர்த்தி ஆசிரியரது
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்.

*வி. அருளானந்தம்*
*பிரதிக்கல்விப் பணிப்பாளர் வடமராட்சி கல்வி வலயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத சில நினைவுகள்

அமரர் மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி அவர்கள் 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் எனக்கு அறிமுகமானார். அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விப்பின் டிப்ளோமா வகுப்பில் நானும் அவரும் ஒன்றாகக் கற்று வந்தோம். புள்ளிவிபரவியல் பாடப்புலம்சார் அறிவுக்காக ஆசிரியர்கள் பலரும் இவரை நாடினர். அவ்வாறு அவரை அண்டியவர்களில் நானும் ஒருவன். குறித்த விடயத்தில் துல்லியமான துலக்கங்கள் ஏற்படும்வரை, அவ்விடயத்தைப் பன்முறை, பலகோணங்களில் மீளவலியுறுத்தும் நல்லாசான் இவர்.

இவரின் அமைதியான சுபாவம், இனிமையான தொடர்பாடல், பிறருக்கு உதவுவதில் உள்ள பெருவிருப்பு, மாணவர் கல்வியில் காட்டும் கரிசனை ஆகிய நற்பண்புகள் தொடர்ந்து இவர்பால் என்னை அன்பு கொள்ள வைத்துவிட்டன.

அமரர் அவர்கள் வயதில் இளையவராக இருப்பினும் பெரிய மனவிலாசமுடையவர். இவரின் ஆளுமை பன்முகப்பட்டது. இவர் மிகச் சிறந்த கணித வல்லுநன்; உறவினர்களுக்கு சிறப்பான உறவினன்; நண்பர்களுக்கு மிக நெருக்கமான நண்பன்; மனைவிக்கு அன்புமிக்க கணவன்; பிள்ளைகளுக்குஉவப்பான அப்பா; சகோதரர்களுக்கு உயிரான சகோதரன்; மாணவர்களுக்கு நெருக்கமான குரு; இத்தனைக்கும் மேலாக, வாடிய பயிருக்கு வான்தாரை போல மாணவர் தேவையறிந்து உதவும் நல்லாசான்.

"ஆறிலுஞ் சாவு நூறிலும் சாவு" என்பர் ஆறுவயது அது அறியாப் பராயம்; நூறு வயது அனுபவித்த பராயம்; ஆனால் அமரர் அவர்களின் வயது? அன்னாரை இழந்து ஆற்றொணாத் துயருறும் அவரின் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தார், உறவினர்கள் ஆகியோரின் துயரினை நானும் பகிர்ந்து கொள்கின்றேன். அன்னாரின்ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

***31. 03. 2003***

***ஆ. ராஜேந்திரன்***
***பிரதிக்கல்விப் பணிப்பாளர்,***
***வடமராட்சிக் கல்வி வலயம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

சிவனுக்கு உகந்த புனித நாளாம் சிவராத்திரி தினத்தன்று எம் பிரானின் திருவடியை சென்றடைந்த திரு. மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தியின் இழப்பை என்னால் இன்னும் ஏற்கமுடியாதுள்ளது. அவன் சிறந்த கணித ஆசான். கணிதத்திலே இடர்படும் மாணவர்களுக்கு அவன் ஓர் கலங்கரை விளக்கு. அவனது கற்பித்தல் நுட்பம் மாணவர்களை அவன் பால் நாடச் செய்தது. வணிகப் புள்ளிவிபரவியல் பாடம் அறிமுகமான காலகட்டத்தில் அப்பாடத்தில் அவன் காட்டிய தேர்ச்சி பல மாணவர்களை பல்கலைக்கழகம் செல்வதற்கு உயர்த்தியது. யா/வடஇந்து மகளிர் கல்லூரியில் ஓர்ஆசிரியனாக நான் கடமையாற்றிய காலத்திலேயே அவனது தொடர்பு எனக்கு கிடைத்தது. அப் பாடசாலைக்கு அவன் ஆற்றிய பணி அளப்பரியது. அவன் சிறந்த பண்பாளன். எல்லோரையும் மதிக்கும் அவனது குணம் போற்றுதற்குரியது. எனது நல்ல நண்பனாக, சகோதரனாக இருந்து இந்த இளவயதிலே எம்மை எல்லாம் விட்டுச் சென்ற அவனது இழப்பு பற்றிய செய்தி இன்னும் எனது மனதை வாட்டுகின்றது. அவனது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாராயணனை பிரார்த்திப்பதோடு அவனது இழப்பால்துயருறும் அவனது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

*சி. நந்தகுமார்*
*பிரதிக்கல்விப் பணிப்பாளர்*
*வடமராட்சி வலயம்.*

*31. 03. 2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி அழிந்தது

திரு. மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி அவர்களுடன், அவர் யா. வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலம் தொடக்கம் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக நெருக்கமான முறையில் தொடர்புகளை வைத்திருக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

அவர் ஆசிரியர் பணியில் நல்லாசிரியனுக்குரிய பண்புகளைக் கொண்டு விளங்கியவர். மாணவர்களிடத்தும், சக ஆசிரியர்களிடத்தும் மிகுந்த அன்பைப் பெற்றிருந்தார். அதிபர், அதிகாரிகளுடன் மிகுந்த மரியாதையுடன் பழகும் நற்குணத்தைக் கொண்டவர். கணிதம், புள்ளிவிபரவியல், கணனி ஆகிய பாடத்துறைகளில் நல்ல புலமையையும் கற்பிக்கும் ஆற்றலில் மிகுந்த திறமையையும் கொண்டு விளங்கினார்.

கற்பித்தலில் மட்டுமன்றி புறச்செயற்பாடுகளிலும் பாடசாலைக்கும், கோட்டக்கல்வி அலுவலகத்திற்கும் கேட்கும் போதெல்லாம்மனம் கோணாது உதவிபுரிபவர்.

என்றும் அமைதியே உருவான, ஒழுக்கத்தில் சிறந்த, பண்பில் உயர்ந்த அந்த நல்லாசான். இன்று ...........

01.03.2003 அன்று எம்மைவிட்டு நீண்டதூரம் சென்று விட்டார் என்ற செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தேன். நல்லவர்கள் நீண்டகாலம் வாழ்வதில்லையோ? என்று என்னுள் எண்ணத் தோன்றியது.

அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆறுதல்களையும் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

***கோட்டக்கல்வி அலுவலகம்***
***பருத்தித்துறை.***

***திரு. சி. புஸ்பலிங்கம்***
***கோட்டக்கல்விப் பணிப்பாளர்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நல்லாசான் பஞ்சு

எம் நல்லாசான் பஞ்சாட்சரமூர்த்தி அவர்களை இழந்து தவிக்கின்றோம். நேற்று முன்தினம் போல் எம் கண் முன் நடமாடிய எங்கள் பஞ்சு ஆசிரியர் பற்றிக் குறிப்பிட வேண்டி உள்ளது. சிறுவயதிலிருந்தே கஷ்டப்பட்டு யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று விஞ்ஞான மானிப்பட்டம் பெற்று பின்னர் யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றி புலோலி மெதடிஸ்தமிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இரண்டு வருடங்களுக்கு மேல் சேவையாற்றினார். அவர் கணித மூலவள நிலையம் அமைப்பதற்கு முழுமூச்சாக நின்று பாடுபட்டவர். அத்துடன் மாணவர்களுக்கு அன்பாகவும், பண்பாகவும் கணித பாடத்தை ஐயம் திரிபறக் கற்பித்தார். சக ஆசிரியர்களுடன் இன்முகம் காட்டி உரையாடுவார்.

இங்கு கற்பிக்கும் போது யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் புள்ளிவிபரவியல் என்ற பாடத்தை க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு அமரர் பஞ்சாட்சரமூர்த்தி அவர்களை விடுவிக்குமாறு திணைக்களம் கேட்டுக் கொண்டது. அவரின் உயர்ச்சிக்குத்தடையாக இராமல் 01.04.1996ம் ஆண்டு முதல் அங்கு சென்றார். மகளிர் கல்லூரியாக இருந்தும் அங்கு நடைபெறும் இணை பாடவிதான செயற்பாடுகளில் முன்நின்று உழைத்தார். அது மட்டுமல்லாது கம்பியூட்டர் அறையை நிர்மானிப்பதில் அதிபருக்கு பல வகையிலும் உதவினார். 21ம் நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப தொழில்நுட்பமும், தகவல் சேகரிப்பு விடயத்திலும் மிகுந்த ஈடுபாடு காட்டினார். தன்னுடைய ஓய்வு நேரங்களில் எல்லாம் கம்பியூட்டரை சிறியோர், பெரியோர் எனப் பாராது அனைவருக்கும் கம்பியூட்டர் அறிவு கிடைக்க வேண்டுமென அரும்பாடுபட்டார்.

நல்லவர்களைஇறைவன் நீண்டகாலம் வாழவிடுவதில்லைப் போலும். ஆறுதலாகவும், அவதானமாகவும் உந்துருளியை (மோட்டார் சைக்கிள்) 2003.02.02ம் திகதி ஓட்டிச் சென்ற போது எதிர்த்திசையில் வேகமாக வந்த உந்துருளிகட்டுப்பாட்டை மீறிய நிலையில் விபத்துக்குள்ளானது. அப்பாவியான எங்கள் ஆசான் படுகாயம் உற்றார். யாழ் போதனா வைத்திய சாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கப்பட்டார். எம் ஆசானை வைத்தியர்கள் கவனக்குறைவாக சிகிச்சை செய்ததாலோ அல்லது காலம் வந்ததாலோ எங்கள் பஞ்சு அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார்கள். அவரது அகால மரணச் செய்தியைக் கேட்டு வடமராட்சிக் கல்விச் சமூகமே கண்ணீர் சொரிந்தது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு மனவலிமையையும், மனஆறுதலையும் இறைவன் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

*திரு. பா. இரகுநாதன்*
*கோட்டக்கல்வி அலுவலர்*
*மருதங்கேணி.*

## யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

அன்புக்குரிய அண்ணலே!

காண்கின்ற போதெல்லாம் நலம் கேட்கும் கண்ணியவான்
கனிந்தநெஞ்சமுடன் உலாவந்த உத்தமன் எங்கள்
பணிக்கு பல வேளைகளில் உதவிநின்ற பணியோன்
கீழ்நிலை, மேநிலை பேதமின்றிச் சமநிலை கண்ட தவப்புதல்வன்
சோகத்தை இங்கே சுமக்கவிட்டு சொல்லாமற்
கொள்ளாமலே போய்ச்சேர்ந்த மாயமென்ன?
அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவன் அருள்புரிவாராக
கலங்கிய நெஞ்சமதை கடமையில் திரும்பி மக்கள்
மழலையின் மனஅமைதிபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கல்விசாரா ஊழியர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நியமனப் பாடசாலை அதிபரின் உணர்வலைகள்

## அதே பணிவு, அதே உணர்வு அதே உறவு

ஒருவனுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதென்பது அவரது வாழ்க்கை ஓட்டத்தில் என்றும் மறக்கமுடியாத ஒரு நிகழ்வு.

அதேபோல ஒருவருக்கு வாழ்க்கைத்துணை கிடைப்பதென்பதும் என்றும் மறக்க முடியாத ஒரு விடயம். இவை இரண்டும் ஒருவருக்கு ஒரே இடத்தில் கிடைப்பதென்பதும் மிக அரிதாகவே இடம்பெறும் நிகழ்வாகும். ஆம் திரு. மா. பஞ்சாட்சரமூர்த்தியைப் பொறுத்தவரை இவை இரண்டும் இடம்பெற்ற பாடசாலையாக யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் அமைந்திருந்தது.

மிகவும் கஷ்டப் பிரதேசப் பாடசாலையாக அமைந்த அப்பாடசாலையில் விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியராகக் கடமையேற்க வந்தபொழுது அவரது உடலும் மனமும் கஷ்டப்பட்டு அங்கே வந்து சேர்ந்தாலும் மிகக் குறுகிய காலத்தில் இவ்வாறான ஒரு பாடசாலை தனக்குக் கிடைத்தது தான் செய்த பாக்கியம் என்று மனம் விட்டுக் கூறக்கூடிய மகிழ்வுடன் நாங்கள் எல்லாம் பழகியது எங்கள் வாழ்வில் என்றும் மறக்கமுடியாத நிகழ்வாகும்.

அவர் மணம் முடித்த அவரது அன்பு மனையாள் எமது பாடசாலையில் கலைப்பட்டதாரி ஆசிரியராக கடமை ஏற்றபின் அவரை விரும்பி மணம் முடித்தாலும், இருவருக்கும் பெரியவர்கள் முறைப்படி பேசியே திருமணம் இடம்பெற்றது. அன்று அனைவரும் நினைக்கும் வகையில் அவர்கள் பக்குவமாகவும் பாங்காகவும் தமது வேலைத்தளத்தில் நடந்து கொண்டமை அவர்களது தனிச்சிறப்பென்றே கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர், மாணவர் உறவு, ஆசிரியர் ஆசிரியர் உறவு, ஆசிரியர் அதிபர் உறவு போன்றவை எவ்வாறு அமைய வேண்டுமென்று கல்விக் கொள்கைகள் கூறுகின்றனவோ அவற்றைவிடவும் அந்நியோன்னியமாக இடம்பெற்ற ஒரு உணர்வுபூர்வமான உறவுச்சங்கமமாக யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் சேவைக்காலம் அமைந்ததென்றால் அதில் அமரர் திரு. மா. பஞ்சாட்சரமூர்த்தி ஆசிரியருடைய பங்கும் பணியும் மகத்தானது.

முதல் நியமனப் பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்று ஒரு தசாப்தம் முடிவடைந்து விட்டாலும் அமரர் பஞ்சாட்சரமூர்த்தி அவர்கள் தொழில் ரீதியாகவும், தனிப்பட்டமுறையிலும் என்னுடன் உரிமையுடன் பழகிவந்த உறவை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதென்பது கடினமான காரியமே.

அதே பண்பு, அதே உணர்வு, அதே உறவுடன் தொடர்ந்தும் ஆசிரியர் பஞ்சாட்சரமூர்த்தி பழகியுள்ளார் என்பதுதான் அந்த ஆசிரியரின் தனித்துவம், அந்த ஆசிரியரின் சிறப்பு, அந்த ஆசிரியரிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயம்.

அண்மையில் எனது அன்னையார் இறையடி சேர்ந்த நிகழ்வில் கலந்து கொள்ள வந்த பொழுதுகூட ஏறத்தாழ ஒரு மணித்தியாலம் அளவில் என்னுடன் இருந்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் பொழுது தனது தாய் தந்தை இருவருக்கும் இறுதிக்கிரியைகள் செய்கின்ற செயற்பாட்டை தான் திருப்தியாக செய்தது பற்றிக்கூறி திருப்தியடைந்த அவருக்கு அவரது பச்சிளம் குழந்தைகள் இறுதிக்கடன்களை செய்வதென்பதை நினைக்கும் பொழுது உள்ளம் கலங்குகின்றது.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*ந. அரியரத்தினம் – அதிபர்*
*யா. சிதம்பராக் கல்லூரி,*
*வல்வெட்டித்துறை.*

*31. 03. 2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றமுடன் எங்கள் கவி ஆரம்

*மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி*

*ஆசிரியர் வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை*

கண்மூடித் திறந்தகணம் உங்கள் உயிர் பறிக்கப்பட்டதை

நம்ப முடியவில்லை – நம்ப முடியவில்லை

நேற்றுப் போல் இருக்குதையா

எமக்கு நீர் கற்பித்ததை

பார்த்திருந்தகாலனவன் காலமறிந்து பறித்தானா

வழிந்தோடும் விழிநீரில்

எங்கள் விழி தேடும் உங்கள் முகம்

விழி தேடும் இடமெல்லாம்

விம்பம் போல் தோன்றுதையா

உன் குடும்பத்தின் விழிக ளெல்லாம்

நீர் தேங்கி நிறைந்ததையா

தேற்றுவோம்

தேறுவோம் நாங்கள்

*சாந்தி சாந்தி சாந்தி*

*ரலன் கல்வி நிலையம்*
*31. 03. 2003*

*நிர்வாகி, ஆசிரியர்கள்*
*மாணவ மாணவர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நெஞ்சமே பஞ்சாட்சரமூர்த்தி

மென்பேச்சு புன்சிரிப்பு மறுத்துரைக்கா மாண்பு
சொல்ல நினைத்ததை முன்னுணரும் ஆற்றல்
சொல்லியதை சோர்விலா மனத்துடன் ஏற்றல்
தன் எண்ணமதை பக்குவமாய் உரைத்து நிற்றல்
மரியாதை செய்வதனை மகுடமாய்க் கொண்ட மன்னன்

கணிதத்தின் ஆசான் புள்ளிவிபரவியல சொல்வதிலும் மேதை
கற்றலுக்குக் காட்டியது நேவிய பாதை
காலத்தின் புதிய கதவு கணனி கச்சிதமாய் பொருந்திய திறவு
எங்கள் பஞ்சாட்சரமூர்த்தி கற்றான் கற்பித்தான்
அகப்பணிக்கும் புறப்பணிக்கும் அற்புதமான இணைப்புப்பாலம்

துடிக்க வைத்த பயணம் சொல்லி மாளாத்துயரம்
நிரப்புச் செய்ய முடியாத வெறுமை,
அன்பு மனையும் அழகுச் செல்வங்களும் அனைத்தும் பெற்றுவாழ
வழி செய்யாமலா விடுவான்
தலைவன் அவனைத் தன்பணிக்காய் அழைத்த ஈசன்

தினம் ஓதும் பஞ்ச அட்சரங்களாய் அவர் நிலைப்பார்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அதிபர்*
*யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைமொழி நண்பன் பஞ்சு

அன்று முதலாம் திகதி சனி அச்செய்தி கேட்டதும் என்னால் நம்ப முடியவில்லை. இருப்பினும் உண்மையா என அறிய ஓடோடி உன்வீடு வந்தேன். நான் கண்டது உனது ஆழ்ந்த உறக்கத்தை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. ஒருவாரத்தின் முன் யாழ்ப்பாண வைத்திய சாலையில் உன்னுடன் அளவளாவினேன். நீயோ கூறினாய் சேர் வயிறு எல்லாம் நெருப்பாய் எரிகிறது என்னால் தண்ணிகூட குடிக்கமுடியவில்லை என்று. எனக்கோ என்ன கூறுவது என்று தோன்றவில்லை. உனது உடல் வேதனை எனக்கு புரிந்தது. நான் வீட்டுக்குப் போகப் போகின்றேன் என்று அலறினாய். சில தினங்களில் வீடுவந்துவிட்டதாக ன் மகன்மூலம் அறிந்தேன். மனம் மகிழ்ந்தேன். ஆனால் அது கேட்டு ஒரு சில தினங்களில் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

எத்தனையோ தடவைகள் ஒன்றா இரண்டா நீயெனக்கு கைகொடுத்த சந்தர்ப்பங்கள். பிரச்சினை பல எனக்கு முன்வந்த போது அவற்றை எதிர் கொண்டு வெற்றி பெற நீதந்த ஆலோசனைகள் உதவிக்கரம் என்னால் மறக்க முடியாது. எந்த ஒரு நிலையிலும் நான் எடுத்த முயற்சிகள் கைகூட பக்கபலமாக நின்ற நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன். யாவும் உதவ வேண்டுமென்ற திடமனதுடன் நீதந்த ஒத்துழைப்பு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வாழ்க்கையில் முயற்சி செய்து முன்னேற வேண்டும், என்ற எனது இலட்சியம், அவா, இடையில் ஆண்டவனால் பறிக்கப்பட்டாலும் நீ உள்ளவரை உன்னாலான சேவையினை வழங்கினாய். உன்னிடம் கல்விகற்றபிள்ளைகள் அதனை என்றும் மறக்கமாட்டார்கள். கணிதத்தை கரும்பாக புகட்டியதால் தான் அந்தப் பிள்ளைகள் என்றும் இல்லாத வகையில் அன்று உனக்காககண்ணீர் மல்கினார்கள். எந்த ஒரு ஏழைப் பிள்ளையும் பாதிக்கப்படக்கூடாது என்ற உனது வேதம் இன்று அவர்கள் உன்னை நினைக்க வைத்துள்ளது. உன்னால் வழிநடத்தப்பட்ட, உனது மாணவர்களும் கல்லூரியும் அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குத் தந்த மரியாதை ஒன்றே போதும் உனது அற்பணிப்பு சேவைக்கு சிறு வயதில் குறுகிய காலத்தில் நீசெய்த சேவைகள் அர்ப்பணிப்புக்கள் என்றென்றும் எமது மனதைவிட்டு நீங்காது. ஒரு கணித ஆசிரியர் என்ற கடமைக்கு மேலாக சிறந்த ஒரு தந்தையாக, நண்பனாக, உதவுபவனாக, நீசெய்த சேவைகள் என்றென்றும் எம் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும். அதுவன்று நீ உதிர்த்த வார்த்தைகள் எம் பிள்ளைகட்கு மந்திர வாக்குகள். ஆம் என்றென்றும் நீ எங்கள் பிள்ளைகளின் ஆசான் அன்றோ.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அன்பு மறவாத நண்பன்,*
*வே. சிவசிதம்பரம்*
*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*

## யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

எங்கள் குருவே பஞ்சு சேர்

ஒளி தந்த சூரியனே உன் வரவுக்காய்ஏங்குகின்றோம்

சூழ்ந்ததென்ன கருமேகம், ஒளிக்கீற்று தோன்றாதா?

ஒருபோதும் அழியாது எம்நெஞ்சில், ஐயா உன் திருநாமம்

சொல்லிவைத்த அறிவுரைகள் ஏற்றுநிற்போம் வாழ்வினிலே.

*மாணவிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்புக்கோர் பஞ்சாட்சரமூர்த்தி

நீண்ட நெடும் வாழ்க்கைப் பயணங்களின் சமகாலத்துப் பாதைகள் கண்முன்னே தெரிகின்றன. கற்களும் முட்களும் மலிந்து கரடுமரடான சமூக நிலைமைகள், முரண்படும் வாழ்க்கைத் தத்துவங்கள், தினம்தினம் நிலைமாறும்மனித இலட்சியங்கள், ஒருமுகப்படாத வாழ்க்கைப் பாணிகள், ஒட்டுமொத்தமாகக் கூறின் உண்மை இன்பங்கள் வறிதாகிப்போகின்ற பாலைவனச் சமூகச்சூழல் நெஞ்சை நெருடுகின்றது. எ ங்கே ஏதும் வழி தெரிகின்றதா என்று ஏங்கும் மானிடநெஞ்சங்களை மகிழ்வூட்ட ஒருசில நம்பிக்கை ஒளிக்கீற்றுக்கள், அருமையாகச் சில பாலைவனச்சோலைகள் தென்படுகின்றன.

அவநம்பிக்கை, இருள்சூழ்ந்த அன்றைய சமுதாயத்தில் வழிகாட்டும் ஒளிவிளக்காக, பாலைவனச் சோலையாகத் தோன்றி தனது அன்பு, அறிவு, அடக்கம், பண்பு என்னும் உயர்குணங்களில் புடம்போட்ட தங்கமாக எல்லோராலும் போற்றப்பட்ட ஓர் உத்தமமான ஆசிரியர் அரைர் பஞ்சாட்சரமூர்த்தி ஆவார். அவரது அன்பான மென்மைப் பண்பும், அறிவுசார் தொழில்மிடுக்கும் சமூகக் கட்டுப்பாடுகளிற் கொண்டாட ஈடுபாடும், அடக்கமும் குடும்பப்பற்றும் அன்னாரை அவரது மாணாக்கர்களிடம் மாத்திரமல்லாது அனைத் மக்களிடத்தும் ஒரு சான்றோனாக்கின. அவருடன் மேற்கொண்ட கல்விசார் கலந்துரையாடல்களும், மாணவர்களது சமகாலக்கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக அவர் கூறிய கருத்துக்களும் இன்னமும் பசுமையாக என்நினைவிலுள்ளன. கல்வித்துறையின் ஓர் ஜீவநதியாக நீண்டநாள் சேவைசெய்து வளம் சேர்ப்பரென நாமனைவரும் நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தோம். விதியென்னும் பகைவன் அவரை விரைந்து கவர்ந்து சென்றுவிட்டான். அவரால் வளம்பெற்ற சோலைவனம் இன்று பாலைவனமாகிப் பரிதவிக்கின்றது. அன்னார் நீண்டநாள் நிலைத்திந்து இவ்வுலகில் சேவையாற்றின் அவரது பொற்றாலிப் பூங்கொடியில் பூத்த மலர்களும் ஞானமமாம் பூங்கொடியில் ஊரெல்லாம் முகிழ்த்தட மொட்டுக்களும் வளம்பல பெற்றிருக்கலாம். ஆனால் இறைவன் அவரை அவ்வுலகிற்கும் அவசியமென்றே அவசரமாக அழைத்துவிட்டான். அன்னாரது இடத்தை இட்டுநிரப்ப இனிய யார் வருவார். அவர் மறைந்தாலும் அன்னாரது சேவைகளும் சிந்தனைகளும் எம்மனதைவிட்டு மறையாது. அமரரது ஆத்மா சாந்தியடைய அவரது வழியில் நம்பணி தொடர்வோமாக.

'பணிவுடையன் முன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றப்பிற'

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திரு. செ. சேதுராசா,
அதிபர்
யா/நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்ததோர் ஆசானின் இழப்பிலிருந்து எழுந்த நெஞ்சில் அகலாத வரிகள்................

கண்ணியமாக நின்சேவையைத் தொடர்ந்து
கண்மணிபோல் சிறார்களைக் கணிதத்தில் தேற்றி
கண்டவரை இன்சொல்லால் இனிதே தேற்றி
விண்ணிற்கேன் விரைவாக விரைந்தாய் பஞ்சு!

காலத்தால் அழியாத உன்தன் சேவை
காலமது பதில்கூறவந்த ஆசான்
சாலச்சிறந்தோனாய் நாங்கள் போற்ற
சீலனே நீ சென்ற பாதை எங்கே!

ஆசானாய்ப் பிறந்தவருள் நீ முதல்வன்
பேசாய் வீண்பேச்சேதும் பிறர் அறிய
வீசாய் எச்சொல்லும் அர்த்தமற்று
பாசமாய் பழகிய பஞ்சு நீ பறந்தனையோ!

இன்று நின் சேவையை நாம்இழக்கலாமோ
என்றுமுன்கரங்களை நாம் பற்றி வாழ்ந்தோம்
கன்றுதனை இழந்த பசுபோல் ஆனோம்
என்று நாம் உம்மைக் காண்பதையோ!

கறைபடியா உன்வாழ்வு கடைசியரை நிலைப்பதற்கு
இறைவனுக்கும் அகமதனில் தோற்றாததேன்
கறைபடிந்த உலகென்றா கடத்திச் சென்றான்
இறையவர்க்கும் உன்சேவை தேவையாமோ!

அன்பான குடும்பமதும் அயலவரும்
அரவணைத்துக் கற்பித்த பிள்ளைகளும்
அயராத உன்சேவை பெற்றவரும்
அன்புடனே சாந்திபெற வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அதிபர் / ஆசிரியர்கள் மாணவர்கள்*
*யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புக்குரிய நல்லாசான்

திரு. மா. பஞ்சாட்சரமூர்த்தி அவர்கள் மிக்க இளமையிலேயே எம்மைவிட்டு அகன்று போனமை கண்டு மனம் நெகிழ்ந்து போனவர்களில் நானும் ஒருவன்.

அவரின் துணைவியார் திருமதி. பு. பஞ்சாட்சரமூர்த்தி அவர்கள் எங்கள் பாடசாலையில் கல்வி கற்பித்த காலத்தில் அமரர் அவர்களின் வியத்தகு நல்லியல்புகளையும் மேன்மையையும் நான் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவரின் சக ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் யாபேரும் அவர் சிறப்புக்குரிய நல்லாசான் என்பதில் ஒரே கருத்துடையராய் உள்ளனர்.

நல்லாசானின் எதிர்பாராத இழப்பால் துவண்டு போயுள்ளஅவரது குடும்பத்தினருக்கும், மற்றும் உறவினர்களுக்கும் மனம் நெகிழ்ந்துபோயுள்ள அவரின் அன்பு நண்பர்களுக்கும், எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெருமைக்குரிய நல்லாசான் அவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்பு உள்ளங்களோடு நானும் இணைந்து பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*திரு. ச. ஸ்ரீஇராமச்சந்திரன்*
*அதிபர் யா / ஞானாசாரியார் கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

அன்புக்கினியனே,

நேயத்தின் நிழல் நெகிழ்வான பேச்சு, மூத்தோரை
முன்னிறுத்தும் மாண்பு, முன்னின்று உழைக்கும் பண்பு
எங்கள் சக நண்பன் பஞ்சாட்சரமூர்த்தி
துன்பமென்றால் ஓடிவந்து கரம் கொடுக்கும் அற்புதன்
துயரில் பங்கெடுக்கும் தூயோன்
எளிமைக்கு உதாரணமாய் ஆசிரியத்துவத்திற்கு
இலக்கணமாய் வாழ்ந்தவர். பிள்ளைகளைப் பெரிதும்
நேசித்தவர். பிள்ளைகளால் பெரிதும் நேசிக்கப்பட்டவர்.
பேதம் அறியாக் குணாளன். பின்னின்று பேசத்
தெரியாத பெரியோன்.
என்ன நடந்தது? ஏன் நடக்க வேண்டும்?
நடவாது இருந்திருக்கலாமே!
காதல் மனைவியின் ஆதரவு கொண்டு
கனிந்த செல்வங்களைப் கட்டியணைத்த அந்தப்
பேரின்பப் பேற்றுக்கு ஏனிந்த ஊறு வந்தது.
துயர் வேண்டாம் சோதரி, தூயவன் கலந்த அந்த
மாயவன் துணையில் துயர் நீங்கி உள்ளம்
அமைதி உற்று வாழ்வில் செழிப்புறுக

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆசிரியர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழும் கண்ணீர் அஞ்சலிகள்

அன்புடனும், பண்புடனும் பழகும் அன்பு நண்பன் ஆசிரியர் திரு. மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தியின் மறைவுச் செய்தி கேட்டு நெஞ்சம் நெகிழ்ந்தது.

பஞ்சு என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட மென்மை உள்ளம் படைத்த பெருமனிதன் தீயுடன் சங்கமமானவை சமூகத்தின் சொல்லொணா பேரிழப்பாகும். சமூகத்தில் அவர்தம் கல்விச்சேவை பரந்துபட்டவை. கணிதத்துறையில் ஆசிரியராகக் கடமையாற்றும் அதே வேளை வடமராட்சியில் வணிகப் புள்ளிவிபரவியல் பாடம் என்றாலே அது திரு. பஞ்சாட்சரமூர்த்தி ஒருவரையே குறிக்கும்.

பல்கலைக்கழகத் தெரிவு முறைக்கு புதியமுறை தெரிவுசெய்யப்பட்ட போது வடமராட்சி கல்வி வலயத்தின் வள ஆளணியாக அமர்ந்து விளக்கமளித்த பெருமையும் திரு. பஞ்சாட்சரமூர்த்தி அவர்களையே சாரும். இவ்வகையில் கல்வி உலகில் இவர்தம் இழப்பு சொல்லொணா துயர் நிறைந்தது.

இவர்தம் குடும்பத்திலே அன்பு மனைவியையும், குழந்தைச் செல்வங்களையும் விட்டுப் பிரிந்தமை ஆற்றமுடியாத பேரிழப்பாகும்.

இத்தகைய பேரிழப்பால் வருத்தமுறும் அனைவரது உள்ளத்திற்கும் எல்லாம் வல்ல இறைவன் சாந்தியை வழங்க வேண்டுமென்று பிரார்த்தித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருளை இறைஞ்சுகின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆ. சிவநாதன்**
**ஆசிரியர், நெ. ம. ம. வி.**
**கரவெட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைபிரியா நண்பனுக்கு இரங்கற் செய்தி

அமைதியும், அன்புறு சிந்தையும் கொண்டு எக்கருமத்தையும் ஆற்றும் எனது அருமை நண்பன் ஆற்றொணாத் துன்பத்தை தந்து அகன்றுவிட்டார் என் இனிய நண்பன் அன்று தொடக்கம் இன்றுவரை எக்கருமம் ஆற்றினும் எம்மோடு இருந்துகலந்துரையாடி கவின்பெறச் செய்வார்.

இளமைக்கால உணர்வுகளிலும் சரி, அறிவு பூத்த காலத்திலும் சரி ஆக்கமான வேலைகள் ஆக்கும் என் இனிய நண்பன் இப்பொழுதுஎன்னிடம் இல்லை எங்களின் தொடர்பு அற்புதமானது ஆழ்ந்த கல்வி அறிவார்ந்த பல்கலைக்கழகத்தில் பெற்ற பொழுதிலும் அங்குள்ள இலட்சியங்களில் என்னுடன் இடையறாது உழைத்தவர். தொழில் நிலையிலும் ஏககாலத்திலேயே நியமனம் பெற்றோம்.

என்னுடைய நண்பனுக்கு என்னோடு ஏக்காலத்தில்கல்விகற்ற பண்புடைய புவனேஸ்வரியை போக்குவரத்துடன் வாழ்க்கைத் துணையாகப் பெற்று பெருமையும், இறைவன் கொடுத்த வரம். இறைவன் கொடுத்த வரத்தோடு இனிமையான காலங்கள் சென்று வளமான வாழ்வும் ஓடியது.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் பெறப்படும்"

என்ற வள்ளுவத்திற்கு இணங்க நல்லறிவுடைய நலமான மக்களைப் பெற்றார். கல்வித்திறனாலும், கூர்ந்த அறிவினாலும் கல்விச் சேவையை அறிவுக்கையளிப்பாக பாடசாலையிலும் சரி தனியார் கல்வி நிலையங்களிலும் சரி எம்முடன் இணைந்து இன்று வரை நடாத்திவந்தார். இப்பொழுது...... இறுதிக்கால ஜீவயாத்திரையின் போதும் "தக்கார்" என்பதற்கு சான்றாக ஊர்வலத்தின் போது திரண்ட மக்கள் உதிர்ந்த கண்ணீர்கள் அடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலிகள் உள்ளத்தை கலங்கவும், நெகிழவும் வைத்தது. காலதேவனின் கைப்பிடிக்கு சான்றாக திடீரென நிகழ்ந்த 'அபத்தம்' அவரைத் தாக்கிற்று. ஆக்கமுள்ள என்அருமை நண்பன் யாரும் அற்று அகன்றான். அவனியே அழுதது. எங்கள் எல்லோரதும் உள்ளம் உறைந்தது 'பஞ்சு' எங்கள் நெஞ்சு தவிக்க அஞ்சும் உலகைவிட்டு அகன்றாய்.

உடன் உறைந்த எமக்கே இத்தனை திகைப்பு என்றால்துணையாக இருந்த மனைவிக்கும் மக்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தார்க்கு நெஞ்சார்ந்த கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிப்பதோடு 'பஞ்சு' பரமன் பதம் சூடவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

"ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர்
வேண்டாம் நமக்கும் இதுவழியே"

*நண்பன்*
*த. கலைச்செல்வன்*
*ஆசிரியர்*
*யா/ஹாட்லிக் கல்லூரி*

*23. 03. 2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சன் ஒரு மாணிக்கம்

மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தியின் மறைவு ஈடுசெய்ய முடியாதவொரு இழப்பாகும். தனது குடும்பம் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள், பிறந்த புகுந்த கிராமம், பாடசாலை, ஆசிரியர்கள், மாணவர்கள் இப்படியான ஒரு பெரிய கூட்டத்திற்குள் எல்லோர் மனத்திலும் தனது எளிமையான, பணிவான பண்புகளால் கவரப்பட்டு அன்பு செலுத்தப்பட்ட ஒருவர் அமரர் பங்சாட்சரமூர்த்தி அவர்கள்.

இவர் எமது சதாபொன்ஸ் நிறுவனத்தில்ஆரம்பகாலம் முதல் கல்வி கற்றுவந்தார். இக்காலங்களிலும் பின்பு பட்டப்படிப்பு படிக்குங் காலங்களிலும் இந்நிறுவன ஸ்தாபகர்களில் ஒருவரான அமரர் நமசியண்ணாவை அடிக்கடி வந்து சந்திப்பார். அதேபோன்று அப்பண்ணாவையும் இத்துன்ப நிகழ்வு நிகழும் காலம்வரை சந்தித்து வந்தார். இவர்களுடன் உரையாடுவது, நலன்களில் அக்கறை காட்டுவது, பரிவு பாசத்துடன் அவர்களுக்கு ஆறுதலும் கூறிவந்ததுடன் மிகுந்த குரு பக்தியும் விசுவாசமும் கொண்டிருந்தார். இன்று இவர்மேல் அதேபோன்ற நிலையில் இவரது மாணவர்கள் இருப்பது காணக்கூடியதாக இருக்கின்றது.

இவரது பெற்றோர் காலங்சென்றதன் பின்பு இவர் தனது சகோதரர்கள் மேல் காட்டி வந்த அன்பு, பரிவு, பொறுப்பு அளப்பரியது. நான் இவர்களது அயலவன் என்பதனால் இதைக் கூறமுடிகிறது.

தற்பெருமை பேசாத, மிகவும் அமைதியான, சாந்தமான ஒரு உதாரண புருஷனாக வாழ்ந்து காட்டிய அமரர் பஞ்சாட்சரமூர்த்தி அவர்களின் இழப்புக்கு ஈடு இல்லை. அவர் காட்டிய நல்வழியை நாமும் பின்பற்றி அவரது ஆத்மா சாந்தியடைய நடப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மு. சுந்தரலிங்கம்* J.P
*சதாபொன்ஸ் – அல்வாய்.*

*31. 03. 2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர விழிகளுடன் உம்மை எண்ணிப்பார்க்கின்றேன்

அன்பின் திருவுருவும், அறிவுச் சுடர் வடிவம், பண்பின் சிகரம், பழகுதற்குத் தமிழ் மொழி போல் இனித்திடும் எழிலுருவம், குடும்பத்தின்குல விளக்கு, கல்வியில் ஞான விளக்கு என விளங்கியவர். இன்று மனவானில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் திரு. பஞ்சாட்சரமூர்த்தி ஆசிரியர் அவர்கள் தானுண்டு தன்கடமையுண்டு எனக் கடமையுணர்வு மிக்க கண்ணியவானாகத் திகழ்ந்தவர். மற்றவர் மனது நோகாவண்ணம் இனிமையாகவும்,எளிமையாகவும், இங்கிதமறிந்து பழகும் சிறந்த பண்பாளன். சமூக நலனில் மிகுந்த அக்கறையுடன் தனக்குக் கிடைக்கும் சொற்ப நேரத்தையும்செலவிடும் சமூகவாதி, சிறந்த தொழிற் பக்தியுடையவர். இதனால் மாணவர் மனங்களில் நீங்கா இடம்பெற்று விளங்கும் ஓர் அகல் விளக்கெனத் திகழ்ந்தார். அவரது சடுதியான விபத்து செய்தியறிந்து மிகவும் மனம் வருந்தியவர்களுள் நானும் ஒருவன். சுகமடைந்து தன் கடமையைத் தொடர்வார் என நம்பியிருந்த வேளை, அயற்பாடசாலை விளையாட்டு விழா நாளில் அவர்தம் ஆவி பிரிந்த செய்தி பேரிடியென எம்மைத் தாக்கியது. ஒரு ஒளி விளக்கு அணைந்து விட்டது. அவர் குடும்பத்திற்கும் மாணவர் சமுதாயத்திற்கும், சமூகத்திற்கும் பேரிழப்பாய் அமைந்து விட்டது. கலங்கித்தவிக்கும் அன்புள் ளங்களைக் காணுகையில் கண்கள் நீரைச் சொரிகின்றன.

அறிவுக் கதிரொளியை ஏற்ற அந்த ஆசானின் உயிர் காலனினால் பறிக்கப்பட்டு விட்டது. அவர் பொய்யுடல் அழிந்தாலும் புகழுடல் என்றும் அழியாது.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்

பொன்றாது நிற்பது ஒன்று இல்" என்பது வள்ளுவர் வாக்கு. விதிவகுத்த பாதை வழியே மனிதன் பயணம் தொடர்கிறது. "கற்பித்தல் உமது கடமையெனக் கொண்டீரே மாணவர்கள் உமது மணியான வார்த்தைகளால் மகிழ்வுடன் கற்பதனை மறந்தே சென்றீரோ"

"புவனத்தை ஆளவந்த புனிதமானவரே
அவனியிலே வாழ்வு போதுமென்று சென்றீரோ"

அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவர் குடும்பம் ஆறுதல் பெறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

*சோ. சிவராஜா*
*கிராமசேவை அலுவலர்*
*துன்னாலை வடக்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

எமது கல்வி நிலையத்தில் இடைநிலை வகுப்புக்களில் கணித ஆசானாகவும், உயர்தர வகுப்பில் வணிகப்புள்ளி விபரவியல் ஆசானாகவும் கடமையாற்றிய திரு. மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தியின் எதிர்பாராத இழப்பு எமது நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் எவராலும் இன்றும் கூட நம்பமுடியாத நிலையிலே இருக்கின்றது. சிறந்த பண்பாளனை நல்ல ஓர் ஆசானை எமது நிலையம் இழந்து விட்டது. அவரது இழப்பை ஈடுசெய்வது என்பது மிகவும் கடினமானது. மாணவர்கள் மீது அவர் காட்டிய அன்பை, பாசத்தை, அரவணைப்பை, கற்பித்தல் நுட்பத்தை எமது மாணவர்கள் என்றும் மறக்கமாட்டார்கள். எமது மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல நிலைக்கு வருவதற்கு அவர் சிறந்த ஓர் அடித்தளம் இட்டுச் சென்றுள்ளார். அவர் எம்மை எல்லாம் விட்டு இறைவன் திருவடியை சென்றடைந்துள்ளார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது சேவை என்றும் எமது நிலையத்தால் நினைவுறுத்தப்படும் என்பதையும் உறுதிகூறுகின்றேன்.

*நிர்வாகி, ஆசிரியர்கள், ஊழியர்கள்*
*மாணவச் செல்வங்கள்*
*மொடேன் கொமேர்ஸ் கல்வி நிலையம்*
*தும்பளை, பருத்தித்துறை.*

*31. 03. 2003*

Devotion to Duty is the Highest worship than THE GOD

கடமை மீதான அர்ப்பணிப்பே கடவுள் வணக்கத்தைக்காட்டிலும் மேன்மைதரும்.

-சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கல் உரை

உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.
என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணம் தந்த பஞ்சனே!

உனது பொறுமை, நிதானம், தீர்க்க முடிவெடுக்கும் தன்மை, வழிகாட்டும் இயல்புகள் எளிதில் மறந்து விடக் கூடியதல்ல.

நண்பர்கள் உறவினர்கள், மாணவர்கள் வாழ வழிகாட்டிய நீ உன் குடும்பத்திற்கும் வழிகாட்டும் முன் இறைவன் பறித்ததன் காரணம் தான் புரியவில்லை.

உன்னுடன் பழகிய நாட்கள், ஒன்றாக இருந்த காலங்கள், ஒன்றாகப் படித்தவை, சுவைத்தவை செய்த உதவிகள் நெஞ்சை விட்டகலாது நெஞ்சை உருக்குகின்றன. நெஞ்சம் மறக்கவில்லை. உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அன்பு நண்பன்.

V. *வினாயகமூர்த்தி*
*திக்கம்*

*31. 03. 2003*

வாழ்வில் முன்னேற்றம் அடைவதற்கு முதலில் தன்னம்பிக்கையும் அடுத்த படியாய் இறைவன் மீது நம்பிக்கையும் வேண்டும்.

ஒருமுகப்படுத்தும் ஆற்றல் வளர வளர அதிக அளவில் அறிவைப் பெறலாம். அறிவைப் பெறுவதற்குரிய ஒரே வழியும் இதுவே.

எதை சிந்திக்கிறாய் என்பதல்ல எப்படி சிந்திக்கிறாய் என்பதில் தான் புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன.

மகிழ்ச்சியின் ரகசியம் நீ விரும்பியதைச் செய்வதில் அல்ல. நீ செய்வதை விரும்புவதில் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவோடு ஆசிரியர் பஞ்சாட்சர மூர்த்தி

"தோன்றிற் புகழொடு தோன்றுக அ∴திலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

ஆசிரியர் பஞ்சாட்சரமூர்த்தியவர்கள் எம்மைவிட்டு பிரிந்து ஒருமாதமாகிறது. எனினும் அவரது தோற்றம், பேச்சு, புன்சிரிப்பு, அறிவு இன்னும் எம்மைவிட்டு நீங்கவில்லை.

பொலிவான தோற்றமுடைய எமது ஆசிரியர் எப்போதும் புன்னகை செய்து கொண்டே எல்லோருடனும் அணுகுவர். நிறைந்த கல்வியறிவு வாய்க்கப் பெற்றவர் எனினும் பெருமையற்றவர், எமது கல்வி நிலையத்தில் நீண்ட நாட்களாகக் கற்பித்தவர்.

ஆசிரியர் அலுவலகத்திற்கு வந்தால் அனைவருடனும் அன்பாகப் பேசுவார். எதையும் ஆக்கபூர்வமாகவே கதைப்பார். கடமையில் என்றும் தவறாதவர். மாணவர்களின் மனதையறிந்து கற்பிக்கும் ஆற்றல் படைத்தவர். ஏனைய ஆசிரியர்களுக்கே முன்மாதிரியாக அமைந்து செயற்பட்டவர். எமது, நிறுவனத்தன் வளர்ச்சியில் தோளோடுதோள் நின்று உழைத்தவர். அவர் கல்வி நிலையத்திற்கு நல்ல பெறுபேறுகளைப் பெற்றுத்தந்தவர். அது மட்டுமன்றி நிறைந்த சமூகத் தொண்டருமாவார்.

இன்று தனது சேவையைப் பூர்த்திசெய்து கொண்டு அன்னார் இறைபம் அடைந்தார். மாணவச் செல்வங்கள் கதறி நிற்கின்றனர். நாம் தவியாயத் தவிக்கின்றோம். நல்லாசான் ஒருவரை நாமெல்லாம் இழந்துவிட்டோம்

அன்பு
பண்பு
அறிவு
அடக்கம்
கடமை

இவையே பஞ்சாட்சரம். ஈடுசெய்ய முடியாத இழப்பால் சமூகமே தவிக்கிறது. அவரது ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

***டால்ரன் கல்வி நிலையம்,***
***துன்னாலை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுமாற்று மாறியும் நிகழ்தகவுப் பரம்பல்களும்

எழுமாற்று பரிசோதனையுடன் தொடர்புபட்டுள்ள மாறியானது பின்னகமான பெறுமானங்களை (முழு எண்களை) மட்டும் எடுக்குமாயின் அது பின்னக எழுமாற்று மாறி (Discrete random variable) எனவும் தொடர்ச்சியான பெறுமானங்களை எடுக்குமாயின் அது தொடர்ச்சியான எழுமாற்று மாறி (Continuous random variable) எனவும் அழைக்கப்படும். எழுமாற்று மாறி பொதுவாக X,Y,Z போன்ற எழுத்துக்களால் குறிக்கப்படும்.

## பின்னக எழுமாற்று மாறிக்கு உதாரணம்

1) இரண்டு கோடலற்ற நாணயங்களைச் சுண்டும்போது பெறப்படும்தலைகளின் எண்ணிக்கை இங்கு $x = 0, 1, 2$ ஆகும்.

2) இரண்டு கோடலற்ற நான்முகித் தாயக்கட்டைகளை ஒன்றாகச் சுண்டும்போது பெறப்படும் எண்களின் கூட்டுத்தொகை ($x = 2, 3, ....8$)

3) கட்டடத் தொகுதி ஒன்றிலே ஒரு நாளில் பழுதடையும் மின்குமிழ்களின் எண்ணிக்கை (இங்கு $x = 0, 1, 2, 3.....$)

## தொடர்ச்சியான எழுமாற்று மாறிக்கு உதாரணம்

1) விற்பனை நிலையமொன்றிலே வாடிக்கையாளர் காத்திருக்கும் நேரம்.

2) இயந்திரமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருளொன்றின் நிறை.

3) இயந்திரமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் ரயரின் பாவனைக்காலம்.

## நிகழ்தகவுப் பரம்பல்

எழுமாற்று மாறி X இனது ஒவ்வொரு பெறுமானங்களுக்குரிய நிகழ்தகவுகளைக் காட்டும் அட்டவணை நிகழ்தகவுப் பரம்பல் எனப்படும்.

## பின்னக நிகழ்தகவுப் பரம்பல்

X என்பது பின்னக எழுமாற்று மாறியாகவுள்ளபோது x இன் பெறுமானங்கள் $x_1$, $x_2$, $x_3$ ..... xn ற்கு எதிராக முறையே அவற்றின் நிகழ்தகவுகள் $f(x_1)$, $f(x_2)$, $f(x_3)$..... $f(x_n)$ ஐ காட்டும் அட்டவணையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்: (1)

கோடலற்ற 4 நாணயங்களை ஒன்றாக சுண்டும்போது பெறப்படும் மாதிரிவெளியிலுள்ள தலைகளில் எண்ணிக்கையானது எழுமாற்று மாறி X இனால் குறிக்கப்படுமாயின் Xஇன் நிகழ்வுப்பரம்பலைக் காண்க.

இங்கு X என்பது பின்னக எழுமாற்று மாறியாகும்.

X இனது பெறுமானங்கள் 0, 1, 2, 3, 4 ஆகும்.

| x | பெறுபேறு | f(x) |
|---|---|---|
| 0 | (TTTT) | $\frac{1}{16}$ |
| 1 | (HTTT), (THTT), (TTHT), (TTTH) | $\frac{4}{16}$ |
| 2 | (HHTT), (THHT), (TTHH), (HTTH), (HTHT), (THTH) | $\frac{6}{16}$ |
| 3 | (HHHT), (HHTH), (HTHH), (THHH) | $\frac{4}{16}$ |
| 4 | (HHHH) | $\frac{1}{16}$ |

**எழுமாற்று மாறி X இனது எதிர்வுப் பெறமானம் E(x)**

எழுமாற்று மாறி X இனது எதிர்வுப்பெறுமானம் E(x) இனால் குறிக்கப்படும். எதிர்வுப் பெறுமானம் என்பது பரம்பலின் இடையைக் குறிக்கும் X என்பது பின்னகமாகவுள்ளபோது

$E(X) = \Sigma \forall \times P[X=x]$ ஆகும்

($\forall$ என்பது x இன் எல்லாப் பெறுமானங்களுக்கும்)

இங்கு x என்பது மாறி X இனது பெறுமானங்கள் $P[X=x]$ என்பது x ற்கான நிகழ்தகவு ஆகும்.

உ +ம்:- (2)

கோடலற்ற மூன்று நாணயங்களை ஒன்றாக சுண்டும்பொது பெறப்படும் தலைகளின் எண்ணிக்கையானது எழுமாற்று மாறி X இனால் குறிக்கப்படுமாயின் X இன எதிர்வுப் பெறுமானத்தைக் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி வெளி S = { HHH, HHT, HTH, HTT, THH, THT, TTH, TTT}

மாறி X இன் பெறுமானங்கள் 0, 1, 2, 3 ஆகும்.

மொத்த நிகழ்ச்சி 8, தலைகளின் எண்ணிக்கை 0 ஆகவுள்ள நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை = 1 இதேபோல்

$$P[X=0]=\frac{1}{8} \quad P[X=1]=\frac{3}{8} \quad P[X=2]=\frac{3}{8} \quad P[X=3]=\frac{1}{8}$$

**நிகழ்தகவுப் பரம்பல்**

| x | P[X = x] | x.P[X = x] |
|---|---|---|
| 0 | $\frac{1}{8}$ | 0 |
| 1 | $\frac{3}{8}$ | $\frac{3}{8}$ |
| 2 | $\frac{3}{8}$ | $\frac{6}{8}$ |
| 3 | $\frac{1}{8}$ | $\frac{3}{8}$ |

$$E(X)=\sum_{\forall} x.P[X=x]$$

$$E(X)=1.5$$

$$\therefore \sum x.P[X=x]=\frac{12}{8}=1.5$$

**எழுமாற்று மாறி X இனது மாறல்திறன் [V(X]**

எழுமாற்று மாறி X இனது மாறல்திறன் V(X) ஆனது பின்வரும் சமன்பாடுகளின் மூலம் கணிக்கப்படும்.

$V(X)=E[X^2]-(E(X))^2$ அல்லது $V(X)=E(x-\mu)^2$ இங்கு $\mu=E(X)$

$V(X)=\sum_{\forall} x^2 P[X=x]-\{\sum_{\forall} x.P[X=x\}^2$

இங்கு $E(X^2)=\sum_{\forall} x^2.P[X=x]$ ஆகும்.

உ+ம்:- (3)

1 தொடக்கம் 5 வரை இலக்கமிடப்பட்ட 5 சீட்டுகளில் இருந்து எழுமாற்றாக ஒவ்வொன்றாக இரண்டு சீட்டுக்கள் எடுக்கப்பட்டது. X



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பெறப்படும் எண்களின் கூட்டுத்தொகையைக் குறிக்குமாயின் எழுமாற்றுமாறி X இனது

1) எதிர்வுப்பெறுமானம் 2) மாறல்திறன்

3) நியமவிலகல் ஆகியவற்றைக் காண்க.

| x | P[X = x] | x.P[X = x] | $x^2$.P[X = x] |
|---|---|---|---|
| 3 | $\frac{2}{20}$ | $\frac{6}{20}$ | 9 X 0.1 = 0.9 |
| 4 | $\frac{2}{20}$ | $\frac{8}{20}$ | 16 x 0.1 = 1.6 |
| 5 | $\frac{4}{20}$ | $\frac{20}{20}$ | 25 x 0.2 = 5.0 |
| 6 | $\frac{4}{20}$ | $\frac{24}{20}$ | 36 x 0.2 = 7.2 |
| 7 | $\frac{4}{20}$ | $\frac{28}{20}$ | 49 x 0.2 = 9.8 |
| 8 | $\frac{2}{20}$ | $\frac{16}{20}$ | 64 x 0.1 = 6.4 |
| 9 | $\frac{2}{20}$ | $\frac{18}{20}$ | 81 x 0.1 = 8.1 |
| | | $\frac{120}{20} = 6$ | 39.0 |

1) எதிர்வுப்பெறுமானம்

$$E(X) = \Sigma x.P[X = x]$$

$$= 6$$

2) மாறல்திறன்

$$V(X) = \Sigma x^2.P[X = x] - \{[\Sigma x.P[X = x]\}^2$$

$$= 39 - 6^2$$

$$= 39 - 36 = 3$$

$$V(X) = 3$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) நியமவிலகல்

$$S(X)=\sqrt{V(X}=\sqrt{3}=1.7$$

## நிகழ்வு மாதிரி உருக்கள்

எழுமாற்று மாறி X ஆனது பின்னக எழுமாற்று மாறியாகவுள்ளபோது குறிப்பிட்ட சில நிகழ்வுகளுக்கான நிகழ்தகவைக் கணிப்பதற்கு "ஈருறுப்புப் பரம்பல் (Binormial Distribution) அல்லது "பொய்சோன் பரம்பல்" (Possion Distribution) பயன்படுத்தப்படுகிறது.

எழுமாற்றுமாறி X ஆனது தொடர்ச்சியான எழுமாற்று மாறியாகவுள்ளபோது நிகழ்தகவைக் கணிப்பதற்கு செவ்வன் பரம்பல் (Normal Distribution) பயன்படுதப்படுகிறது.

## ஈருறுப்புப்பரம்பலானது பின்வரும் நிபந்தனைகளின் கீழ்ப்பயன்படுத்தப்படும்

1) மாறியானது பின்னகமாக இருத்தல் வேண்டும்
2) ஒவ்வொரு நிகழ்வும் இருபேறுகளை மட்டும் கொண்டிருத்தல் வேண்டும்.
3) ஒவ்வொரு நிகழ்வும் மற்றைய நிகழ்வில் சாராது இருத்தல் வேண்டும்.
4) ஒவ்வொரு நிகழ்வின்போதும் வெற்றி பெறுவதற்கான நிகழ்தகவு சமனாக இருத்தல் வேண்டும்.
5) நிகழ்வுகளின் எண்ணிக்கை முடிவுள்ளதாக இருத்தல் வேண்டும்.

ஈருறுப்புப் பரம்பலொன்றின் பரமாணங்கள் n. p யாகவுள்ளபோது எழுமாற்று மாறி X இன் ஒரு பெறுமானம் x இற்கான நிகழ்தகவு

$P[X=x]={}^{n}C_{x}p^{x}.\,q^{n-x}$ ஆகும்.

இங்கு $x=0, 1, 2, ......\ ......n,$

p - வெற்றி பெறுவதற்கான நிகழ்தகவும் $p+q=1$ம் ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம்:(1)

தாயக்கட்டை ஒன்றை 5 முறை சுண்டும்போது 6 என்ற எண்

1) 2முறை வருதல் 2) 3 முறை வருதல் ஆகியவற்றுக்கான நிகழ்தகவுகளைக் காண்க.

மேற்படி வினாவில் இரண்டு பேறுகள் மட்டுமே உள்ளன. அவை 6 என்ற எண்வருதல், 6 அல்லாத எண் வருதல்.

6 என்ற எண் வருவதற்கான நிகழ்தகவு p எனின் $p = \frac{1}{6}$

6 அல்லாத எண் வருவதற்கன நிகழ்தகவு q எனின் $q = \frac{5}{6}$

5 முறை சுண்டுவதால் n = 5 ஆகும்.

∴ ஈருறுப்புப் பரம்பலை பயன்படுத்தும்போது

1) 2 முறை வருதல்

$n=5 \quad p = \frac{1}{6} \quad q = \frac{5}{6} \quad x=2$

(இங்கு x என்பது 6 என்ற எண் வரும் எண்ணிக்கை)

$$\therefore P[X = 2] = {}^5C_2[\frac{1}{6}]^2[\frac{5}{6}]^{5-2}$$

$$= 10 \times [\frac{1}{6}]^2 \times [\frac{5}{6}]^3 = \frac{625}{3888} = 0.1607$$

(4 தசம இலக்கத்திற்கு)

2) 3 முறை வருதல்

$n=5 \quad p = \frac{1}{6} \quad q = \frac{5}{6} \quad x=3$

$$\therefore P[X = 3] = {}^5C_2[\frac{1}{6}]^3[\frac{5}{6}]^{5-3} = {}^5C_2[\frac{1}{6}]^3[\frac{5}{6}]^2$$

$$= \frac{125}{3888} = 0.0322$$

(4 தசம இலக்கத்திற்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ - ம்:(2)

இயந்திரமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் 20% மானவை பழுதானவையாகும். இதிலிருந்து 10 பொருட்கள் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டால் அவற்றில்

1) 2 பழுதானதாக இருத்தல்

2) 2 அல்லது 2 இலும் கூடியவை பழுதானதாக இருத்தல்

3) 5 இலும் குறைவானவை பழுதாக இருத்தல்

ஆகியவற்றுக்கான நிகழ்தகவுகளைக் காண்க.

இங்கு ஈருறுப்புப் பரம்பல் பயன்படுத்தலாம்

X என்பது தெரிவுசெய்யப்பட்ட 10 இல் பழுதான பொருட்களின் எண்ணிக்கை என்க.

முறை:- 1 கணித்தல் மூலம் நிகழ்தகவுகளைப் பெறுதல்

1) 2 பழுதானதாக இருத்தல்

X - என்பது பழுதான எண்ணிக்கையைக் குறிப்பதால்

p - என்பது பழுதானதாக இருப்பதற்கான நிகழ்தகவைக் குறிக்கும்

$\therefore p = 0.2,\ q = 0.8\ n = 10\ x = 2$

$P[X=2] = {}^{10}C_2 (0.2)^2\ (0.8)^{10-2}$

$= 45(0.2)^2\ (0.8)^8$

$= 45 \times 0.04 \times 0.1678$ (மடக்கை வாய்ப்பாட்டைப் பயன்படுத்தலாம்)

$= 0.3020$

2) 2 அல்லது 2 இலும் கூடியவை பழுதாக இருத்தல்

இங்கு 2 அல்லது 2 இலும் கூடியவை பழுதாக இருப்பதற்கான நிகழ்தகவைக் கணிப்பதற்குப் பதிலாக 1இல் இருந்து 1உம் 1 இலும் குறைவானவையும் பழுதாக இருப்பதற்கான நிகழ்தகவைக் கழிப்பது கணித்தலை இலகுவாக்கும்.

அ - து $P[X \geq 2] = 1 - P[X \leq 1]$

$= 1 - P[X=0\} - P\{X=1]$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$= 1 - {}^{10}C_0 (0.2)^0 (0.8)^{10-0} - {}^{10}C_1 (0.2)^1 (0.8)^{10-1}$

$= 1 - (0.2)^0 (0.8)^{10} - 10 \times (0.2)^1 (0.8)^9$

$= 1 - 0.1074 - 0.2684$

$= 0.6242$

3) 5 இலும் குறைவானவை பழுதாக இருத்தல்

$P[X<5\} = P[X=0\} + P[X=1] + P[X=2\} + P[X=4]$

ஒவ்வொரு நிகழ்தகவுகளையும் கணித்து அவற்றைக் கூட்டுவதன்மூலம் P[X<5] பெறப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் திரட்டிய ஈருறுப்பு நிகழ்தகவு அட்டவணையை பயன்படுத்துவது இலகுவானது.

முறை 2 (திரட்டு ஈருறுப்பு நிகழ்தகவு அட்டவணையைப் பயன்படுத்தல்)

1) 2 பழுதானதாக இருத்தல்

ஈருறுப்புப் பரம்பலின் பரமாணங்கள் n, p ஆகும். இங்கு $n = 10, p = 0.2$ ஆகும். $x = 2$

அட்டவணையைப் பயன்படுத்தும்போது $n = 10$ ஆகவுள்ளபோது $x = 2$ ற்கு நேராக $p = 0, 2$ இற்கு கீழேயுள்ள பெறுமானத்தை எடுத்தால் அது 0.6778 ஆகும். இப்பெறுமானம் $x = 2$ உம் 2 இலும் குறைவாகவும் உள்ள நிகழ்தகவுகளின் கூட்டுத்தொகையைக் குறிக்கும். அது $P[X \leq 2] = 0.6878$ ஆகும். எனவே $P[X = 2]$ ஐக் கணிப்பதற்கு 2 இலும் குறைவான நிகழ்தகவுகளைக் கழிக்க வேண்டும்.

$P[X=2] = P[X \leq 2] - P[X \leq 1]$

$= 0.6778 - 0.3758$

$= 0.3020$

2) 2 அல்லது 2 இலும் கூடியவை பழுதானதாக இருத்தல்

$P[X \geq 2] = 1 - P[X \leq 1]$

$= 1 - 0.3758$

$= 0.6242$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) 5 இலும் குறைவானவை பழுதாக இருத்தல்

$P[X<5] = P[X \leq 4]$

$P[X \leq 4]$ ஐக் கணிப்பதற்கு $n=10 \quad p=0.2 \quad x=4$ ற்கு நேராகவுள்ள பெறுமானத்தை எடுக்க வேண்டும்.

$P[X<5] = P[X \leq 4] = 0.9672$

**குறிப்பு:-**

1) x என்பது பழுதான பொருட்களின் எண்ணிக்கையாயின் P என்பது ஒரு பொருள் பழுதானதாக இருப்பதற்கான நிகழ்தகவு ஆகும். x என்பது நல்ல பொருட்களின் எண்ணிக்கையைக் குறிக்குமாயின் p என்பது ஒரு பொருள் நல்லதாக இருப்பதற்கான நிகழ்தகவாகும்.

2) மேற்படி வினாவில் 4 பொருட்கள் நல்லதாக இருப்பதற்கான நிகழ்தகவு தேவையெனில் அதற்குப் பதிலாக 6 பொட்கள் பழுதானதாக இருப்பதற்கான நிகழ்தகவைக் கணிக்கலாம்.

3) 5 இலும் கூடியது நல்லதாக இருத்தல் என்ற நிகழ்தகவு கணிக்க வேண்டுமெனில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நல்லது | 6 | 7 | 8 | 9 | 10 |
| பழுதானவை | 4 | 3 | 2 | 1 | 0 |

∴ 4ம் 4இலும் குறைவானது பழுதாக இருப்பதற்கான நிகழ்தகவைக் கணிக்க முடியும்.

$P[X \leq 4]$ ஆகும்.

## ஈருறுப்புப் பரம்பலொன்றின் இடை, மாறல்திறன், நியமவிலகல்

ஈருறுப்புப் பரம்பலொன்றின் இடை $E(X) = \mu = nP$ ஆகும்

மாறல் திறன் $V(X) = npq$

நியமவிலகல் $\sigma = \sqrt{V(X)} = \sqrt{npq}$ ஆகும்

உ+ம்:- கோடலற்ற தாயக்கட்டை ஒன்று 180 தடவைகள் சுண்டப்படும்போது 5 என்ற எண்ணைப்பெறுவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) எதிர்வுப்பெறுமானம் 2) மாறல்திறன் 3)நியமவிலகல்

ஆகியவற்றைக் காண்க.

1) எதிர்வுப்பெறுமானம்

$$n = 180 \quad P = \frac{1}{6}$$

$$E(X) = nP = 180 \times \frac{1}{6}$$

$$= 30$$

2) மாறல் திறன்

$$V(X) = npq$$

$$= 180 \times \frac{1}{6} \times \frac{5}{6}$$

$$= 25$$

3) நியமவிலகல்

$$S(X) = \sqrt{V(X)} = \sqrt{25} = 5$$

## பொய்சோன் பரம்பல் (Poisson Distribution)

ஈருறுப்பு பரம்பல் ஒன்றிலே குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சிக்கான நிகழ்தகவு மிகவும் சிறிதாகவுள்ளபோது பொய்சோன் பரம்பல் பயன்படுத்தப்படும். இது ஓர் ஓராயப்பரம்பலாகும். ஈருறுப்புப் பரம்பலிலே கூறப்பட்ட நிபந்தனைகள் பொய்சோன் பரம்பலுக்கும் பொருந்தும்.

X என்பது பொய்சோன் எழுமாற்று மாறியாகவுள்ளபோது நிகழ்தகவு பரம்பல் சார்பானது $P[X = x\} = \frac{e^{-\mu} \mu^{x}}{x!}$ என்ற சமன்பாட்டினால் தரப்படும்.

இங்கு μ - என்பது குறிக்கப்பட்ட கால இடைவெளியில் நிகழ்வுகளின் சராசரியாகும்.

(பொய்சோன் பரம்பலொன்றின் பரமாணம் μ அல்ல λ இனால் குறிக்கப்படும்.

### பொய்சோன் எழுமாற்று மாறி X ற்கான உதாரணங்கள்

1) விற்பனை நிலையமொன்றுக்கு ஒரு நாளில் வரும் தொலைபேசி அழைப்புகளின் எண்ணிக்கை

2) ஒரு நாளில் இடம்பெறும் விபத்துக்களின் எண்ணிக்கை

3) துணிச்சுருள் ஒன்றின் 1 மீற்றரில் உள்ள பழுதுகளின் எண்ணிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ - ம்: (1)

X என்பது பொய்சோன் எழுமாற்று மாறியாகவும் $\mu = 2$ ஆகவும் இருப்பின்

1) $P[X=0]$ 2) $P[X=2]$ 3) $P[X<3]$ ஆகியவற்றைக் காண்க.

$$P[X=x]=\frac{e^{-\mu}\mu^{x}}{xi}$$

$$P[X=0]=\frac{e^{-2}\times 2^{2}}{0i}=\frac{e^{-2}\times 1}{1}=e^{-2}=0.1353$$

$$P[X=2]=\frac{e^{-2}\times 2^{2}}{2i}=\frac{e^{-2}\times 4}{2}=2e^{-2}=2\times 0.1353=0.2706$$

$$P[X<3]=P[X=0]+p\{X=1]+P[X=2]$$
$$=0.1353+0.2706+0.2706=0.6765$$

திரட்டு பொய்சோன் அட்டவணையைப் பயன்படுத்துவதன் மூலம் நிகழ்தகவுகளைக் கணிக்க முடியும்.

உ-ம்:(2)

பெரிய கட்டடத் தொகுதி ஒன்றிலே ஒரு நாளிலே பழுதடையும் மின்குமிழ்களின் எண்ணிக்கையானது பொய்சோன் பரம்பலில் அமைந்திருந்தது. சராசரியாக 1 நாளில் 4 மின்குமிழ்கள் பழுதடைந்தது எனக் கொண்டு பின்வருவனவற்றுக்கான நிகழ்தகவுகளைக் காண்க.

1) நாளொன்றிலே 3 இலும் குறைவான மின்குமிழ்கள் பழுதடைதல்

2) நாளொன்றிலே 5 இலும் கூடிய மின்குமிழ்கள் பழுதடைதல்

3) 3 நாட்களில் 7 இலும் கூடிய மின்குமிழ்கள் பழுதடைதல்

1) $\mu$ என்பது குறிப்பிட்ட கால இடைவெளியில் உள்ள நிகழ்வுகளில் சராசரிப் பெறுமானம் என்பதால் இங்கு $\mu = 4$ ஆகும்.

x என்பது 1 நாளில் பழுதான மின்குமிழ்களின் எண்ணிக்கை என்க.

∴ தேவையான நிகழ்தகவு $= P[X<3]$

$= P[X\leq 2]$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரட்டு பொய்சோன் பரம்பல் அட்டவணையில் $\mu = 4$ ஆகும்.

$x = 2$ ற்கு நேராகவும் உள்ள நிகழ்தகவு = 0.2381 ஆகும்.

இப்பெறுமானம் $x = 2$ ஆகவும் 2 இலும் குறைவாகவும் உள்ள நிகழ்தகவு களின் கூட்டுத்தொகையாகும்.

$\therefore \quad P[X \leq 3] = 0.2381$

அ-து $P[X < 3] = 0.2381$

2) $\mu[X > 5 = 1 - P[X \leq 5]$

$= 1 - 0.7851 = 0.2149$

3) 1 நாளில் சராசரியாக 4 மின்குமிழ்கள் பழுதடைகின்றது.

$\therefore$ 3நாளில் சராசரியாக 12 மின்குமிழ்கள் பழுதடையும் எனவே இங்கு $\mu = 12$ ஆகும்.

$\therefore$ தேவையான நிகழ்தகவு $\mu = 12$ ஆகவுள்ளபோது $P[X > 7]$ ஆகும்.

$\therefore P[X > 7 = 1 - P[X \leq 7]$

$= 1 - 0.0895 = 0.9105$

பொய்சோன் பரம்பலொன்றில் எதிர்வுப் பெறுமானம் $E(X) = \mu$ ஆகும்.

பொய்சோன் பரம்பலொன்றில் மாறல்திறன் $V(X) = \mu$ ஆகும்.

பொய்சோன் பரம்பலொன்றில் நியமவிலகல் $\sigma(X) = \sqrt{\mu}$

உ-ம்: X என்பது இடை 4 ஆகவுள்ள பொய்சோன் பரம்பலில் அமைந்திருந்தால்

அ - து $X \sim Pio(4)$

$E(X) = 4, \ V(X) = 4 \quad \sigma(X) \sqrt{4} = 2$ ஆகும்.

## செவ்வன் பரம்பல் (Normal Distribution)

மீடிறன்களை ஒப்புறவாக்கி பெறப்படும் வளையியானது ஓராய வளையியாகவோ சமச்சீரான வளையியாகவோ அமையலாம். இவ்வாறு பெறப்படும் சமச்சீரான வளையிகள் மேலும் சில பண்புகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பின் அவை செவ்வன் பரம்பல் எனப்படும். செவ்வன் பரம்பல்கள் வணிக புள்ளி விபரவியலில் பல்வேறு இடங்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

**செவ்வன் பரம்பலின் இயல்புகள்**

1) மணியுருவடிவான சமச்சீரான வளையி

2) இடை, இடையம், ஆகாரம் மூன்றும் ஒரே பெறுமானமாக இருக்கும்

3) மையத்திலிருந்து இருபுறமும் சீராகக் குறைந்து செல்லும்

4) வளையியானது கிடை அச்சை அணுகிச் செல்லும் ஆனால் வெட்டாது

5) வளையியானது σ நியம விலகல் அலகு தூரத்தில் பரவிக் காணப்படும்.

6) இது ஓர் நியம செவ்வன் வளையியாயின் பரப்பளவு 1 அலகு ஆகும்.

செவ்வன் பரம்பலின் இடை μ இனாலும் நியம விலகல் σ வினாலும் குறிக்கப்படும் μ, σ என்பன செவ்வன் பரம்பலின் பரமாணங்கள் எனப்படும்.

எழுமாற்று மாறி X ஆனது தொடர்ச்சியானதாகவுள்ளபோது நிகழ்தகவுகளைக் கணிப்பதற்கு செவ்வன் பரம்பலானது பயன்படுத்தப்படுகிறது. இடை பூச்சியமாகவும் நியம விலகல் ஒன்றாகவுமுள்ள செவ்வன் பரம்பலானது நியம செவ்வன் பரம்பல் எனப்படும். நியம செவ்வன் வளையியின் நியம விலகல் அலகு தூரம் Zற்கான பரப்பளவுகளும், குறித்த பரப்பளவுக்கான Z பெறுமானங்களும் அட்டவணையில் இருந்து கணிக்கப்படும்.

X என்பது இடை μ உம் நியம விலகல் δ உம் உள்ள செவ்வன் பரம்பலில் இருந்தால் X இற்கும் Z இற்கும் இடையிலான தொடர்பு

$$Z = \frac{X - \mu}{\delta}$$ ஆகும்

குறிப்பு:- இவ்விடயம் வணிகவியலாளன் இரண்டாவது மலரிற்காக அமரர் திரு.பஞ்சாட்சரமூர்த்தி அவர்களால் எழுதப்படடது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்





எங்கள் குடும்பவிளக்கு எதிர்பாராத விபத்தில் சிக்குண்டபோது உதவிசெய்த அன்பர்கள், நண்பர்கள், பார்வையிட்டு ஆறுதல் கூறியவர்கள். 01.03.2003 அன்று எங்கள் ஒளிவிளக்கு அணைந்துவிட்டது என்ற சேதிகேட்டு ஓடிவந்தோர், உடன் இருந்து ஆறுதல் கூறியோர், தொலைபேசி மற்றும் தந்தி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோர், கண்ணீர் அஞ்சலி, கண்ணீர்க்கவிதை அச்சிட்டு வெளியிட்ட பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், குருமார்கள், அஞ்சலியுரை ஆற்றிய கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், இறுதி நிகழ்வாம்தீக்கடனில் பங்கேற்றோர், பாண்ட் வாத்தியக் கருவி இசைத்து வழித்துயர் தெரிவித்தோர், இன்றைய மோட்சதீப சபிண்டீகரண நிகழ்வில் பங்கேற்ற அன்பர்கள், பெரியோர்கள், கல்விமான்கள், மாணவர்கள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள், இம்மலரை வெளியிடுவதற்கு இரங்கல் உரை வழங்கிய கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி நிறுவனங்கள், குருமார்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், நண்பர்கள் அனைவருக்கும், இம்மலரைத் தொகுத்தவர்க்கும், கிரியைகள் நடாத்திய குருக்கள் ஐயா அவர்களுக்கும், அச்சிட்ட அச்சகத்தார்க்கும், மரணச்சடங்கிலும், அந்தியேட்டிக் கிரியையிலும், யாழ் ஆஸ்பத்திரியிலும் எல்லா வகையிலும் உதவிபுரிந்த அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் உளம் நெழிந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

'மகேஸ் இல்லம்'
துன்னாலை வடக்கு, கரவெட்டி

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ் (தனியார்) நிறுவனம்,**
**424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**
தொ.இல - 021-2222717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org